பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 23 வியாழக்கிழமை (06.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :130

# அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமாக முன்நகர்த்தாமல் இனிமேலும் ஜனாதிபதி சாக்குப்போக்குக் கூறமுடியாது

## தேர்தல் முடிவு அதை உணர்த்தியுள்ளது என்கிறார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,ஏப்.6

தென்னிலங்கையில் மிக வெளிப்படையாகவும், கடுமையாகவும் இன வாதம் பேசிய கட்சிகளை இந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் தூக்கி எறிந்துள்ளனர். எனவே, இனிமேலும் இனவாதிகளைக் காட்டி, சாக்குப்போக்குக் காரணங்களைக் கூறி, அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுக்காமல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இழுத்தடிக்க முடியாது. இரட்டைவேடம் போடுவதை விடுத்து, இனி அமைதி முயற்சிகளை விரைந்து, இதய சுத்தியுடன் முன்னெடுத்துச்செல்ல அவர் முன்வரவேண்டும்.

- இவ்வாறு கூறியிருக்கிறார், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சியில் நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்ஸன் போவரைச் சந்தித்து உரையாடிய பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை 9 மணிக்கு விசேட ஹெலிகொப்டர் மூலம் நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சகிதம் கிளிநொச்சி வந்தடைந்த நோர்வேயின் சிறப்புத் தூதர் போவர், முதலில் வடக்கு-கிழக்கு மனித உரிமைச் செயலகத்துக்குச் சென்றார். மனித உரிமைகள் நிலை குறித்து அங்கு அவர் கேட்டறிந்தார். முற்பகல் 11 மணியளவில் புலிகளின் சமாதானச் செயலகத்துக்கு வந்த அவரை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வரவேற்றார்.

அதைத் தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையில் ஆரம்பமான பேச்சு பிற்பகல் ஒரு மணிக்கு முடிவடைந்தது.

புதிய தூதருக்கு புலிகளின் தலைமை நினைவுப் பரிசில்களை வழங்கியது.

நேற்றைய பேச்சுகளின்போது தமிழ்ச் செல்வனுடன் புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நேற்றைய சந்திப்பை அடுத்து ஊடகவியலாளர்களுக்கு அளித்த செவ்வியில் தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

**கேள்வி:-** இன்றைய சந்திப்புக் குறித்து..?

**பதில்:-** புதிதாகப் பதவியேற்றுள்ள நோர்வேயின் விசேட தூதருடனான அறிமுக சந்திப்பாக இது அமைந்தது. இச்சந்திப்பில் கள நிலைமை குறித்து விளக்கினோம்.

களத்தில் ஏற்பட்டுவரும் நெருக்கடிகளை விரிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம். ஜெனீவாவில் நடந்த பேச்சுகள், அங்கு கண்ட இணக்கப்பாடுகள், அதன்பின் (02ஆம் பக்கம் பார்க்க)

# ஒட்டுப்படை அட்டகாசம் தீவிரமானால் புலிகளே உரிய நடவடிக்கை எடுப்பார்கள்

## தமிழ்ச்செல்வன் திட்டவட்டம்



நேற்று வன்னிக்கு விஜயம் செய்த நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்ஸன் போவர் விடுதலைப் புலிகளின் பிர்திநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது...

கிளிநொச்சி,ஏப்ரல் 6

**"தமிழர் தாயகத்தில் ஒட்டுப்படைகளின் அட்டகாசம் எல்லை மீறுவதை வெறுமனே பார்த்துக் கொண்டு - பொறுத்துக்கொண்டு - இருக்கமாட்டோம். தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு மதிப்பளித்து - யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு மதிப்புக் கொடுத்து - அந்த உடன்படிக்கையின் அமுலாக்கம் மூலம் ஒட்டுப்படைகளின் அட்டகாசத்துக்கு முடிவுகட்ட முயற்சிப்போம். அதையும் மீறி அட்டகாசம் - சமூக விரோதச் செயற்பாடு - தொடர்ந்தால், அதைத்தடுப்பதற்கான நடவடிக்கைகளை நாங்களே எடுக்க வேண்டிய கட்டம் ஏற்படுமாக இருந்தால், நிச்சயமாக அந்த முடிவை எமது அமைப்பு தயங்காமல் எடுக்கும்."- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அர்சியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.**

நேற்று நண்பகல் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து 'உதயன்' செய்தியாளருக்கு அளித்த விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் அவர் தெரிவித்ததாவது:-

**கேள்வி:-** கிழக்கில் முஸ்லிம் மக்களைப் பாதுகாக்கத் தனிப்படை ஒன்றை அரசு உருவாக்குவதற்கு எடுத்துள்ள முயற்சி குறித்து....?

**பதில்:-** அரசின் சதித்திட்டமாகவே இதைக் கருதுகிறோம். தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டுப் பலமாக இருக்கின்ற சூழலை சிங்கள இனவாதிகள் என்றும் விரும்பியதில்லை. காலங்காலமாக இவ் விடயத்தில் சூழ்ச்சி செய்து, சதி செய்து, தமிழ்- முஸ்லிம் மக்களின் உறவுகளை சீர்குலைத்து, அவர்களை மோதவைப்பது சிங்களத்தரப்பின் தொடர் நடவடிக்கை.

அண்மைக் காலத்தில் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் நல்லுறவும், புரிந்துணர்வும் கட்டி எழுப்பப்பட்டு நல்ல சூழல் உருவாகும் நிலையில், இதைச் சகித்துக் கொள்ளமுடியாத ஸ்ரீலங்காவின் இனவாதிகளும், சிங்களப் படையினரும் சேர்ந்து, இப்படியான நடவடிக்கையை மேற்கொள்ளத் துணிந்துள்ளார்கள்.

முஸ்லிம் மக்களைப் பலி கொடுப்பதற்கும், முஸ்லிம் இளைஞர்களைப் பலிகொடுப்பதற்கும் தந்திரோபாயமாக இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்கள். இதனை முஸ்லிம் மக்கள் மத்தியில் பிளவையும், மோதல்களையும், பெருத்த அனர்த்தத்தையும் ஏற்படுத்தும் முயற்சியாகத்தான் (02ஆம் பக்கம் பார்க்க)

# இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி மஹிந்த நேற்று சந்தித்துப் பேச்சு

கொழும்பு,ஏப்.6

விடுதலைப் புலிகளுடனான அடுத்த கட்ட அமைதிப் பேச்சுகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் கொழும்புப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கிறார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தச்சந்திப்பில் கொழும்பிலுள்ள ஜப்பானியப் பிரதித் தூதுவர் கரூபே, நோர்வே பிரதித் தூதுவர் லிக்ரெட், அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லன்ஸ்டெட், ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் வென்டெஜக், ஐரோப்பிய ஒன்றிய ஆணை (14ஆம் பக்கம் பார்க்க)

# புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு ஈ.பி.டி.பி. தெரிவானதை எதிர்த்து மனு

கொழும்பு,ஏப்.6

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தேர்தலின்றியே தெரிவானார்கள் என்று வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட அறிவித்தலை ரத்துச்செய்யக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த எஸ். ரவிச்சந்திரன், வி. பரமலிங்கம் ஆகியோர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, வவுனியா தெரிவத்தாட்சி அதிகாரி உட்பட 14 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# இணக்கப்பாடு காண்பதற்கான வேளை வந்துவிட்டது என்கிறார் இந்தியப் பிரதமர்

## ரணிலுடனான சந்திப்பின்போது தெரிவிப்பு

புதுடில்லி, ஏப்.6

இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அடிப்படைவாத, இனவாதமற்ற அனைத்துத் தரப்பினரும் ஒரே கொள்கையின் கீழ் செயற்படவேண்டுமென்றும் அதற்கான வேளை வந்துவிட்டதாகவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ஐ.தே.க. தலைவர் ரணில் நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமரை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

அப்போதே மேற்கண்டவாறான கருத்தை (14ஆம் பக்கம் பார்க்க)

# பத்தாயிரம் விடுதலைப் புலிகளுக்குக் கொரியாவில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவாராம் மேர்வின்

## நாடாளுமன்றில் நேற்று விதண்டாவாதம்

"தமிழீழ விடுதலைப்புலிகள் எவருக்காவது தொழில்வாய்ப்பு வேண்டுமா? சுமார் 10 ஆயிரம் புலிகள் உறுப்பினர்களை என்னிடம் அனுப்பிவையுங்கள். அவர்கள் அனைவருக்கும் நான் கொரியாவில் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கின்றேன்.

"பிரபாகரன் விரும்பினால் அவருக்கும் நல்ல [illegible] தொழில்வாய்ப்பை நான் கொரியாவில் பெற்றுக்கொடுக்கிறேன். என்னிடம் ஆயு (14ஆம் பக்கம் பார்க்க)

### நாளைய கல்விச்சுடரில்

**தரம் 5 புலமைப்பரிசில் - வெளியீடு 8 வினாத்தாள், வெளியீடு 7 விடைக்குறிப்புகள், இந்துநாகரிகம் விடைக்குறிப்புகள் என்பன வெளிவரும்.**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் தின நிகழ்வு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கெயர் சர்வதேச நிறுவனம் 'விழித்தெழும் விம்பங்கள்' என்ற நிகழ்வை இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நிகழ்த்தவுள்ளது.

இந்த நிகழ்வில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பெண் உரிமைகள் தொடர்பான பேச்சு, நாடகங்கள், கவிதைகள் போன்ற கலை நிகழ்வுகள் , பரிசில் வழங்கல் நிகழ்வும் நடைபெறும். (ஓ)(18)

## கைதான மாணவரை ஹாட்லி அதிபர் சந்தித்தார்

பருத்தித்துறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு தற்போது பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் இருவரையும் தான் நேற்றுமுன்தினம் காலை சந்தித்தார் என்று ஹாட்லிக் கல்லூரி அதிபர் என். தெய்வேந்திரராசா தெரிவித்தார்.

இந்த மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றுவது பாதிக்கப்படும் எனச் சுட்டிக்காட்டி இவர்களை விடுவிக்குமாறு பொலீஸாரிடம் தான் கோரினார் எனறும்-

ஆயுதங்களுடன் பிடிபட்டனர் என்று கூறி படையினரால் ஒப்படைக்கப்பட்ட இம் மாணவர்கள் படையினரின் முடிவைப் பொறுத்தே விடுவிக்கப்பட முடியும் என்று பொலீஸார் கூறினர் என்றும் -கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார். (ஒ-70)(18)

# ஒட்டுப்படை அட்டகாசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கிறோம்.

சிங்களப்படைகள் தாங்கள் இப்பிரச்சினையில் இருந்து தப்பிக் கொண்டு முஸ்லிம் இளைஞர்களைப் பகடைக்காய்களாக்குவதற்கான ஒரு முயற்சியாக இதை முன்னெடுக்கின்றன. இதில் முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருந்து, சிங்கள இனவாதிகளின் முயற்சிகளிலிருந்து விலகித் தப்பிக் கொள்ளவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. தமிழ்-முஸ்லிம் மக்களின் உறவை இப்படியான சதிமூலம் பிளவு படுத்த முடியாது. என்றோ ஒருநாள் யதார்த்தம் நிலைக்கும். தமிழ்-முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருந்து இந்தச் சதி முயற்சிகளை முறியடிக்க வேண்டும்.

**கேள்வி:-**ஜெனீவா பேச்சின் போது 'ஜிகாத்' குழுவையும், 'கருணா குழுவையும் ஒட்டுக் குழுக்கள் எனத் தெரிவித்திருந்தீர்கள். இப்போது அந்தக் குழுக்களை ஜனநாயக வழிக்குத் திரும்பிய குழுக்களாகப் பிரகடனம் செய்ய முயற்சி எடுக்கப்படுகின்றது. இது குறித்து...?

**பதில்:-**கருணாகுழு, ஈ.பி.டி.பி. குழு, 'ஜிகாத்' குழு போன்ற பல்வேறுபட்ட குழுக்களை வைத்து அரசு இயக்குகின்றது. இவற்றைச் சட்டரீதியான - அனுமதிக்கப்பட்ட - குழுக்களாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கலாம். அப்படி ஓர் அபாயம் இருப்பதையும் ஜெனீவாப் பேச்சில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

நாம் எதிர்பார்த்தபடி இப்போது அரசு அந்த முயற்சியை எடுக்கின்றது.

கருணா குழுவை ஓர் அரசியல் சக்தியாக்க முயற்சிக்கிறார்கள். அதேபோல் 'ஜிகாத்' ஆயுதக்குழுவை சட்டரீதியான ஒரு படைக்கட்டமைப்பாகக் காட்ட முயற்சிக்கிறார். இது ஒரு சதி நடவடிக்கைதான்.

இதனை உலகமும் ஏற்காது. நாங்களும் ஏற்கமாட்டோம். எமது மக்களும் ஏற்கமாட்டார்கள். இம்முயற்சிக்கு வலுவான எதிர்ப்புக் குரல் எழும்பியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசின் இந்தச் சதி முயற்சியும் சூழ்ச்சியும் நிச்சயமாக வெற்றியளிக்கா. இந்தச் சூழ்ச்சித் தனம் அம்பலமாகும் என்றுதான் நினைக்கிறேன்.

**கேள்வி:-** கண்காணிப்புக் குழுத் தலைவராக இருந்து விலகிச் சென்றவர் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். கருணா குழுவின் ஆயு தத்தை புலிகள் களையும் நிலை ஏற்படும் போது மோசமான விளைவு உருவாகும் என அவர் எச்சரித்துள்ளார். இது குறித்து......?

**பதில்:-** கருணா குழுவின் ஆயுதங்கள் களையப்படும்போது, இராணுவத்துடன் பாரிய முறுகல் நிலை ஏற்படும். இராணுவம்தான் கருணா குழுவை வைத்து இயக்கிக்கொண்டிருக்கின்றது. இராணுவப் பாதுகாப்புடனும் இராணுவச் சீருடையுடனும்தான் இந்த ஒட்டுக் குழுக்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

ஆகவே, இவர்கள் மீது நாங்கள் ஒரு நடவடிக்கையை எடுக்கும்போது, அது பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்தும். பாரிய அழிவை சிங்களப்படைக்கு உருவாக்கும். இது தவிர்க்க முடியாததுதான்.

இதைக் கருத்திற்கொண்டுதான் கண்காணிப்புக்குழுத் தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்காப் படையும், ஸ்ரீலங்கா அரசும் இந்த நிலையை உணர்ந்துகொண்டு இந்த ஆயுதக்குழுக்களை தமிழர் தாயகப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும்.

இதற்காகத்தான் - இந்நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் - யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்த விடயம் சேர்க்கப்பட்டுள்ளது.

**கேள்வி:-** கருணா குழுவின் ஆயுதங்களை அரசு களைய நடவடிக்கை எடுக்காவிட்டால் அந்த ஆயுதங்களை நீங்கள் களையும் நிலை உருவாகுமா?

**பதில்:-** எங்களைப் பொறுத்தவரையில் எங்கள் பிரதேசங்களுக்குள் மக்கள் விரோத நடவடிக்கைளில் ஈடுபட்டு, மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகச் செயற்பட்டு, வன்முறைகளை - கொலைகளை- கட்டவிழ்த்துவிட்டு, சட்டவிரோத -சமூகவிரோத - நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதை நாம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதை அனுமதிக்கவும் முடியாது.

இந்த அமைதி முயற்சிக்கு மதிப்பளித்து - யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு மதிப்பளித்து - அந்த அமுலாக்கத்தின் அடிப்படையில் இவர்களுக்கு முடிவு கட்டுவதற்கு முயற்சிப்போம். அவை எல்லாம் நிராகரிக்கப்பட்டு அவர்கள் அத்துமீறி தங்களின் சமூக விரோதச் செயல்களைத் தொடரும்போது, நாங்கள் அதற்கான ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டம் ஏற்படுமாக இருந்தால், நிச்சயமாக அத்தகைய முடிவை எமது அமைப்பு எடுக்கும்.

**கேள்வி:-** கடந்த பேச்சுக்குப் போகும்போது பயணப் பாதுகாப்பு உத்தரவாதத்தை நீங்கள் கோரவில்லை. இந்தத் தடவை திடீரெனப் பாதுகாப்பு உத்தரவாதம் கோரியுள்ளீர்களே. ஏன்...?

**பதில்:-**அண்மைக்காலமாக இந்த ஆயுதக் குழுக்கள் பகிரங்கமாக இலங்கை இராணுவத்துடன் வெளிப்படையாகவே செயற்படும் சூழல் உருவாகியுள்ளது.

இப்போது யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் கூட ஆயுதக்குழுக்கள் இராணுவத்தோடு சேர்ந்து காட்டிக்கொடுப்பிலும், சட்டவிரோத நடவடிக்கைகளிலும் மக்களை அச்சுறுத்தி, அதட்டிப் பணம் பறிப்பதிலும், கொலைகளைச் செய்வதிலும் வெளிப்படையாக ஈடுபட்டுள்ளன. அந்த நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே, இந்த நிலையில் எங்களின் போராளிகளின் பாதுகாப்பு, எமது பேச்சுக்குச் செல்லும் தூதுக்குழுவின் பாதுகாப்பு என்பன எமது தலைமைப்பீடத்தின் கரிசனைக்கு உட்பட்ட விடயமாக இருப்பதால், நோர்வேத் தரப்பிடம் பாதுகாப்பு உத்தரவாதம் கோரி மனுச்செய்துள்ளோம்.

**கேள்வி:-**எந்த வழியில் ஜெனீவா செல்வது என முடிவு செய்துள்ளீர்கள்?

**பதில்:-** அதை நோர்வேத் தரப்புத் தான் தீர்மானிக்கவேண்டும். முழுப்பாதுகாப்பு உத்தரவாதத்தையும், முழு அளவிலான கௌரவமான பயண ஒழுங்குகளையும் ஏற்படுத்தித் தரவேண்டியது நோர்வேயின் பொறுப்பு. அவர்கள் அதை முடிவு செய்யவேண்டும். எந்த வழிமூலம் போக்குவரத்து என்பதையும் நோர்வேதான் முடிவு செய்ய வேண்டும். (உ-3)

## நீதிமன்றம் பராமரிக்கும் குழந்தையை தத்துக்கொடுப்பதற்கான தேர்வு

யாழ்ப்பாணம், ஏப்.6

சாவகச்சேரி நீதிமன்றக் கண்காணிப்பில் உள்ள குழந்தையை தத்தெடுக்கும் பெற்றோரைத் தெரிவு செய்வதற்கான தேர்வு எதிர் வரும் பதினோராம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளதாக பதிவாளர் செ.விக்னேஸ்வரமூர்த்தி அறிவித்துள்ளார்.

ஆதரவற்ற நிலையில் உள்ள இக் குழந்தை, நீதிமன்றக் கண்காணிப்பில் தற்போது உள்ளது. இக் குழந்தையைத் தத்தெடுக்க விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை நீதிமன்றம் கோரியிருந்தது. இதற்கமைய பெற்றோர்கள் பலரும் விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களில் பொருத்தமான பெற்றோரை தெரிவுசெய்வதற்கான தேர்வே நடைபெறவுள்ளது. விண்ணப்பித்தவர்கள் உரிய ஆதாரங்களுடன் தேர்வில் பங்குகேற்குமாறு கோரப்பட்டுள்ளனர். (ஓ)(18)

# அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களநிலைவரத்தில் ஏற்பட்டுள்ளமாற்றங்கள் ஆகியன குறித்து எடுத்துக்கூறினோம்.

அரசு, ஜெனீவா உடன்பாட்டை மதித்து நடப்பதை உறுதிசெய்வது, அடுத்த கட்ட முயற்சிகளுக்கு முக்கியம் என்பதையும் எடுத்துக் கூறினோம்.

**கேள்வி:-**அடுத்த கட்டப் பேச்சுகள் இடம் பெறுவதற்கான சாத்தியங்கள் உள்ளனவா?

**பதில்:-**அடுத்த கட்டப் பேச்சுகளுக்கு முன்னால் முதற்கட்டப்பேச்சில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அமுலாக்கம் பற்றியும், அதன் அமுலாக்கத்தின் மூலம் பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்புவது பற்றியும் வலியுறுத்தினோம்.

குறிப்பாக, ஜெனீவாவில் இணக்கப்பாடு கண்ட பின்பு, தமிழர் தாயகப் பிரதேசத்தில் முன்பு இருந்ததைவிட ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் வெளிப்படையாகவே இராணுவத்துடன் சேர்ந்து பொதுமக்களை அச்சுறுத்தி, வன்முறைகளைக் கட்டவிழ்த்து, போராளிகள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள சூழலை எடுத்து விளக்கியுள்ளோம். இவற்றுக்கு ஆதாரமான ஆவணங்களையும் கையளித்துள்ளோம்.

**கேள்வி:-** பேச்சுக்கு இன்னமும் இருவாரங்கள் இருக்கின்றன. அதற்குள் ஜெனீவா இணக்கப்பாட்டை அரசு அமுலாக்கம் செய்யும் என நம்புகிறீர்களா?

**பதில்:-** அரசு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு கால அவகாசம் இன்னும் சொற்பமே உள்ளது. அதற்குள் அரசு தனது நல்லெண்ணத்தைக் காட்டவேண்டும் என்பதை நோர்வேயிடம் வலியுறுத்தினோம்.

**கேள்வி:-** தெற்கில் உள்ளூராட்சித் தேர்தலின் பின் உருவாகியுள்ள சூழல் இந்த அமுலாக்கத்துக்கு உதவுமா?

**பதில்:-**நிச்சயமாக, மிகவெளிப்படையாகவும், கடுமையாகவும் இனவாதம் பேசிய கட்சிகள் மக்களாலேயே தூக்கி எறியப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனிமேலும் சாக்குப்போக்குக் காரணம் கூறுவதற்கு ஒன்றுமேயில்லை.

அவர் தமிழ் மக்களின் பிரச்சினையில் தீர்க்கமான முடிவுகளை எடுத்து, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு முழு அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும். அதற்கான பொறுப்பும், கடமையும் அவருக்கு உண்டு. அதற்கான ஆணையைத்தான் சிங்கள மக்கள் அவருக்கு வழங்கியுள்ளனர் என நான் நினைக்கிறேன். இனி அவர் எந்த விதத்திலும் இரட்டைவேடம் போடாமல், தீர்க்கமான முடிவுகளை எடுத்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முனையவேண்டும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கத்தில் நேர்மையாக நடப்பதை அவர் உறுதி செய்யவேண்டும். ஜெனீவா உடன்பாட்டை மிக விரைந்து நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே கள நிலைமைகளைச் சீராக்கிக் கொண்டு அமைதி முயற்சிகளை நாங்கள் முன்னெடுத்துச்செல்ல முடியும் என நினைக்கிறேன்.

**கேள்வி:-** ஜெனீவா உடன்படிக்கை அமுல் செய்யப்படாத நிலையில், 2ஆம் கட்டப் பேச்சுக்குச் செல்வது என்பது உங்கள் இறுக்கமான நிலைப்பாட்டில் நீங்கள் தளர்வு காட்டுவது போல் அமையாதா?

**பதில்:-**இன்னும் நாள்கள் இருக்கின்றன. அதற்குமுன் இன்று நோர்வே தரப்புக்கு எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டை எடுத்து விளக்கியுள்ளோம்.

இனிவரும் நாள்களுக்குள் இவ் விடயத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகளும், முன்னெடுப்புகளும் தான் ஜெனீவாவில் அடுத்த கட்டப்பேச்சுக் குறித்து நாம் தீர்மானம் எடுக்கும் காலமாக - விடயமாக - இருக்கும் எனக் கருதுகின்றேன்.

**கேள்வி:-** முதல் சுற்றுப் பேச்சில் அரசு எதையும் செய்யாத நிலையில் 2ஆம் கட்டப் பேச்சுக்குப் போவதில் என்ன பயன் கிட்டப் போகின்றது?

**பதில்:-**நிச்சயமாக எமது தலைமைப் பீடம், அடுத்த கட்ட முயற்சிகள் - பேச்சுகள் - பற்றி தீவிர பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இப்போது கள நிலைமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் - குறிப்பாக இந்த ஆயுதக் குழுக்களின் வெளிப்படையான நடமாட்டங்களும், வன்முறைகளும் மேலும் தீவிரப்படுத்தப்பட்ட நிலைமை - சிரத்தைக்கும், கவலைக்கும் உரியவை. அண்மையில் மட்டக்களப்பில் பகிரங்கமாக, ஆயுதக் குழுக்களான கருணா குழு, ஈ.பி.டி.பி. குழு போன்றவை மீண்டும் மக்கள் மத்தியில் இறங்கி, வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றன. இக்குழுவினர் வெளிப்படையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவை பற்றிய தகவல் அனைத்தையும் நோர்வேயிடம் தெரிவித்துள்ளோம்.

நாளை ஜனாதிபதியைச் சந்திக்கும்போது, எமது கருத்துகள் குறித்துத் தாங்கள் அவருடன் பேசப்போகின்றார்கள் என நோர்வேத் தரப்பினர் வாக்குறுதி அளித்துள்ளனர். ஆகவே, நாங்கள் பொறுமை[illegible]

எமது அடுத்த க[illegible]டவடிக்கைகளை எடுப்பதற்காக எங்கள் தலைமைப்பீடம் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

**கேள்வி:-** ஜெனீவா பேச்சுக்குப் பின் வடக்கையும், கிழக்கையும் பிரிக்கக் கொழும்பில் கூட்டம் ஒன்று நடந்துள்ளது. இதற்கு அரசு ஆதரவும், அங்கீகாரமும் வழங்கியுள்ளது. அது குறித்து ....?

**பதில்:-**அரசு அங்கீகரித்துள்ளதோ இல்லையோ என்பதற்கு அப்பால் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். தற்போது நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சிங்கள மக்கள், பச்சை இனவாதம் பேசும் கட்சிகளைத் தூக்கி எறிந்துள்ளனர். கிழக்கில் தமிழ் மக்கள் அவர்களின் உறுதிப்பாடு தொடர்பாக தங்கள் நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். ஆயுதக் குழுக்களின் செயற்பாட்டுக்கு சாட்டையடி கொடுத்துள்ளார்கள். தெற்கில் உள்ள சிங்கள மக்கள் கூட சமாதானத்துக்கு விரோதமான சக்திகளைத் தூக்கி எறிந்துள்ளார்கள்.

இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை இன்னும் தெளிவுபடுத்த வேண்டிய நிர்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ தெளிவான நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டு, தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்குணர்ந்து தனது போக்கிலும் செயற்பாட்டிலும் மாற்றங்களைக் காட்டுவது அவசியம்.

**கேள்வி:-** அதாவது மஹிந்த சிந்தனையை மாற்ற வேண்டும் என்று கூறுகிறீர்கள்?

**பதில்:-** நிச்சயமாக.

**கேள்வி:-** அடுத்த கட்டப் பேச்சில் பங்கு பற்றும் உங்களுக்கான பயணப் பாதுகாப்புக் குறித்து....?

**பதில்:-**இது தொடர்பான விடயங்களை நோர்வேயிடம் தெரிவித்தோம். எமது பயண ஏற்பாடுகள் குறித்தும் தெரிவித்துள்ளோம்.

அடுத்தகட்டப் பேச்சுகளை முன்னெடுப்பதாயின் களநிலைமையில் ஏற்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும், எமது தலைமைப் பீடத்தின் கரிசனை, நிலைப்பாடு தொடர்பாகவும் விலாவாரியாக நோர்வேக்கு எடுத்து விளக்கியுள்ளோம். அவர்கள் தமது தரப்பில் உரிய முயற்சிகளை எடுப்பார்கள் என்று உறுதி கூறினர்.

இனிவரும் நாள்களில் நடக்கப்போகும் நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டுதான் அடுத்த கட்ட முடிவுகளை எமது தலைமைப் பீடம் எடுக்கும் [illegible] நினைக்கிறேன்.

இன்று அரசுக்குத் தெளிவாகப் பல செய்திகளை அனுப்பியுள்ளோம். அதாவது, முக்கியமாக ஜெனீவாவில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அமுலாக்கம் பற்றியும், கள நிலைமையில் ஏற்பட்டுள்ள நிலை பற்றியும் தெரிவித்துள்ளோம். மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புகின்ற நடவடிக்கைகளை எடுப்பதன் அவசியம் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளோம்.

**கேள்வி:-** எட்டப்பட்ட இணக்கப்பாட்டை அமுல் செய்யாத நிலையில், அடுத்தகட்ட பேச்சில் கலந்து அரசின் போக்கை அம்பலப்படுத்தும் தேவை உங்களுக்கு இருப்பதாகக் கருதப்படுகின்றது. அது குறித்து .....?

**பதில்:-** இனிவரும் நாள்களுக்குள் எமது தலைமைப் பீடம் கூடவிருக்கின்றது. இப்பொழுதுள்ள கள நிலைமைகள், தென் தமிழீழத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் ஆகிய விடயங்கள் குறித்து தலைமைப் பீடம் கூடி ஆராயவிருக்கின்றது.

தெளிவான, உறுதியான முடிவுகளை தலைமைப்பீடம் எடுக்குமென நம்புகிறேன். அது பற்றி விரிவாக விளக்கிக் கூற முடியாதிருக்கிறேன்

**கேள்வி:-** அடுத்தகட்டப் பேச்சில் பேசவுள்ள விடயங்கள் குறித்து இன்று கலந்துரையாடினீர்களா?

**பதில்:-**முதற்கட்டப் பேச்சில் பேசி இணக்கப்பாடு கண்ட விடயங்கள் அமுலாக்கப்படாததால் பெரும் ஏமாற்றமும், அதிருப்தியுமே எஞ்சியுள்ளன. இந்த நிலையில் அடுத்த கட்டத்தில் பேசும் விடயங்கள் குறித்து ஆராயும் நிலைமை இன்று ஏற்படவில்லை.

ஜெனீவாவில் நடந்த முதற்கட்டப் பேச்சில் இணக்கப்பாடு கண்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் பெரிய சிக்கல்கள் உருவாகியிருக்கின்றன.

இன்னமும் இலங்கை அரசு தனது அர்ப்பணிப்பையோ, ஈடுபாட்டையோ இவ்விடயத்தில் காட்டவில்லை. எதிர்மறையாக - முன்பிருந்ததைவிட ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பகிங்கரமாக இராணுவத்துடன் வந்து அவர்கள் செயற்படுகிறார்கள்.

**கேள்வி:-** யுத்த நிறுத்தம் தொடர்பான பேச்சுகளே நடக்கின்றன. இறுதித் தீர்வு தொடர்பான பேச்சை எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள்?

**பதில்:-**அதாவது சமாதான முயற்சிகளின் அடிப்படை இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையும் அதன் அமுலாக்கமுமாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுலாக்குவதன் மூலம்தான் இயல்புநிலையைக் கொண்டுவரலாம். அப்போதுதான் அடுத்த கட்ட விடயங்கள் குறித்துப் பேசலாம்.(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3637.

# எய்ட்ஸ் பரவாமல் தடுப்பதற்கு விழிப்புணர்வுப் பிரசாரம் அவசியம்

ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் வேகமாகப் பரவி, மனிதப் பேரவலத்தை உருவாக்கியிருக்கும் கொடூர நோயான எய்ட்ஸ் குறித்தும், அதன் தொற்று மற்றும் பரவல் நிகழாமல் தடுக்கும் விதத்தில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும், அந்தத் தொற்றுக்கு உள்ளானோரை பரிவோடு கவனித்து உயர்வாழ்வை அவர்களுக்கு அமைத்துக் கொடுப்பது குறித்தும் சர்வதேச மட்டத்தில் பிரசாரங்களும், நடவடிக்கைகளும் விரிந்து வருகின்றன. அதன்ஓர் அம்சமாக எட்டாவது ஆசிய - பசுபிக் எய்ட்ஸ் மாநாடு அடுத்த ஆண்டு ஓகஸ்டில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

ஆட்கொல்லி எய்ட்ஸ் நோயின் பரவல் தொடர்பான தகவல்கள் நெஞ்சை உலுக்கி அதிர வைப்பன. உலகைப் பற்றிப் பீடித்து, கபளீகரம் செய்து, தன்னுள் பொசுக்கும் ஆவேசத்துடன் எய்ட்ஸ் தொற்றுக்குக் காரணமான எச். ஐ. வி. கிருமிகள் பரவி வருகின்றன.

உலகில் இப்போது ஒவ்வொரு வருடமும் அரைக் கோடிக்கும் அதிகமான எண்ணிக்கையுடையோர் புதிது, புதிதாக எய்ட்ஸ் தொற்றுக்கு ஆளாகி வருகின்றனர். அதாவது, தினசரி 14 ஆயிரம் பேரை எச். ஐ. வி. கிருமி புதிதாகப் பற்றிப் பிடிக்கின்றது.

இன்று உலகில் நான்கு கோடி மக்கள் எய்ட்ஸ் நோயாளிகள்; அந்த நோயினால் பாதிக்கப்பட்ட - பதினைந்து வயதுக்கும் இருபத்தினான்கு வயதுக்கும் இடைப்பட்ட - சுமார் ஒன்றரைக் கோடி இளைஞர், யுவதிகள் எய்ட்ஸ் தொற்றுடன் வாழ்கின்றார்கள். ஒவ்வொருநாளும் ஏறக்குறைய ஆறாயிரம் இளைஞர், யுவதிகள் இந்நோயின் தொற்றுக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றனர்.

பதினைந்து வயதுக்கு உட்பட்ட 35 லட்சம் சிறுவர்கள் எய்ட்ஸ் காரணமாகத் தமது பெற்றோரை இழந்துள்ளனர்.

ஐ. நா. அறிக்கைகளின்படி தினசரி எட்டாயிரம் பேர் இந்நோயினால் பலியாகின்றார்கள்.

மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் எய்ட்ஸ் பரவல் மற்றும் பாதிக்கப்பட்டோர் விகிதம் குறைவானதுதான். ஆனால், அது அபாய எச்சரிக்கையை எழுப்பும் புள்ளி விவரமாக இல்லாமல் இல்லை.

இலங்கையில் ஐயாயிரம் முதல் ஏழாயிரம் வரையானோர் எய்ட்ஸ் நோய்க்குக் காரணமான எச். ஐ. வி. கிருமிகளைத் தமது உடலில் கொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

எய்ட்ஸ் உயிர்கொல்லி அதிகம் காலூன்றி அனர்த்தம் விளைவித்து வருவது ஆபிரிக்காவிலாகும். அதையடுத்து நமது அண்டை நாடான இந்தியாவில் அதன் பிடி இறுகியுள்ளது.

இந்தியாவிலிருந்து அகதிகள் வருவதும், நமது தாயக மக்களுக்கு இந்தியாவுடனான வாழ்வியல் தொடர்புகளும் நம் நாட்டுக்குள் எய்ட்ஸுக்கு இலகுவான பாதையை அமைத்துக் கொடுத்து விடும் என்ற நியாயமான அச்சம் எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் மத்தியில் நிலவுகின்றது.

மேற்கத்தைய நாகரிகத்தில் மூழ்கி, நமது உயர்வான சமூக, கலாசார விழுமியங்களைத் தொலைத்து, மலினமான - விரசமான - உணர்வுகளின் மயக்கத்தில் சிக்கி, எய்ட்ஸை விலை கொடுத்து வாங்கும் வீணர்களாக நமது மக்கள் மாறுவதை விரைந்து தடுத்தாக வேண்டும்.

யாரோ செய்த தவறுக்காக எய்ட்ஸ் என்ற கொடிய அரக்கனைச் சுமக்கும் நிலைக்குத் தள்ளப்படும் சிசுக்களையும், இரத்த மாற்றீடு போன்ற மருத்துவச் செயற்பாடுகளின் போது தவறுதலாக இந்நோயின் பிடிக்கு ஆளாகின்றவர்களையும், அவ்வாறு சிக்காமல் காப்பாற்றுவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

எய்ட்ஸை ஒடுக்குவதற்கான தடுப்பு மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இயன்ற விரைவில் அது கண்டுபிடிக்கப்படும் என்று உறுதி கூறுவதற்கான சாத்தியமும் இல்லை.

எனவே, இன்றைய நிலையில், முதலில் இந்நோய் பரவாமல் - மேலும் பலர் பாதிக்கப்படாமல் - காபந்து பண்ணுவதே - காப்பாற்றுவதே - அவசர, அவசிய நடவடிக்கையாக இருக்கின்றது.

இந்நோய் பற்றியும், அதன் பரவல் முறை பற்றியும், அது பரவாமல் தடுக்கக்கூடிய வழிமுறைகள் குறித்தும், அந்தமுறைகள் பின்பற்றப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் நமது சமூகத்துக்கு- குறிப்பாக இந்த நோயின் தொற்றுக்கு அதிகம் ஆளாகக்கூடிய இளம் சமுதாயத்துக்கு - விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகின்றது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளருக்கான சிகிச்சை, பரிவுடன் கூடிய பராமரிப்பு என்பவற்றுக்கான நடவடிக்கைகள் ஒருபுறம் எடுக்கப்படும் அதேசமயும், நோய்த் தொற்று பரவாமல் தடுக்கும் விழிப்புணர்வுப் பிரசாரமும் முழுமூச்சில் மறுபுறம் மேற்கொள்ளப்படவேண்டும்.

எய்ட்ஸ் இப்போது இலங்கையின் வாசற் கதவையும் தட்ட ஆரம்பித்துவிட்டது. விழிமின்! எழுமின்! உயர் எச்சரிக்கையோடு இருமின்!

# நாட்டில் கண்ணிவெடி ஆபத்து 60சதவீதம் குறைந்துவிட்டது

## - யு.என்.டி.பி. - யுனிசெப் அறிக்கை -

கொழும்பு,ஏப்.6

கண்ணிவெடி தொடர்பான விபத்துக்கள் நாட்டில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் 60 சதவீதம் இப்பொழுது குறைவடைந்துள்ளது. இந்தச் சாதனை பாராட்டுக்குரியதுதான். ஆனால், கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காமல் கிடக்கும் பொருள்களினால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து நாடு முழுமையாக விடுதலை பெறுவதை உறுதிசெய்வதற்கான வேலைகள் இன்னும் முன்னெடுக்கப்படவேண்டியுள்ளன.

சர்வதேச கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டுத் தினத்தையொட்டி யு.என்.டி.பி மற்றும் யுனிசெப் அமைப்புகள் வெளியிட்டுள்ள செய்தியொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கண்ணிவெடி செயற்பாட்டு தினம் நேற்று இலங்கையில் அனுஷ்டிக்கப்பட்டது.

கண்ணிவெடிகள் அகற்றுவதும் அது தொடர்பான கல்வி புகட்டும் செயற்பாடுகளும் இலங்கையில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. உலகில் மிகவும் மோசமாகக் கண்ணிவெடிகளினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டு வருகின்றது. கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஆதரவளிக்கப்பட்டு வந்துள்ளதுடன் கண்ணிவெடி ஆபத்து பற்றிய கல்வி புகட்டலும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. கண்ணிவெடிகளினால் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருபவர்களுக்கு உதவிகளும் வழங்கப்படுகின்றன. 2005 ஆம் ஆண்டு கண்ணிவெடி அகற்றும் திட்டத்தின்கீழ் 545 ஆயிரம் மக்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். கண்ணி வெடியினால் பாதிப்புறுபவர்களின் எண்ணிக்கை நான்கு மடங்கு குறைவடைந்துள்ளது. 2002ஆம் ஆண்டு 152ஆக இருந்தது. 2005ஆம் ஆண்டு 38ஆக வீழ்ச்சிகண்டுள்ளது.

- இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-190)(33)

# துணைவேந்தர் நியமன இழுபறியால் பரீட்சைப் பெறுபேறுகள் தாமதம்!

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தர் ஒருவரை நியமனம் செய்தமை தொடர்பாக நிலவிவரும் இழுபறி நிலையை அடுத்து பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கலைப்பீட முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்குரிய முதலாம் பருவ பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடக்கூடிய வகையில் தயார் நிலையில் உள்ளன. பெறுபேறுகளை எதிர்பார்த்து மாணவர்களும் ஆவலோடு உள்ளனர்.

துணைவேந்தரின் அமைதியைப் பெற்ற பின்னரே பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடமுடியும். பொறுப்பேற்கும் துணைவேந்தர் தமது அலுவலகத்தில் பணியை மேற்கொள்ளும் போதே அவருடைய அனுமதியோடு பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, புதிய துணைவேந்தர் நியமனம் தொடர்பான சர்ச்சைகள் தொடருமாயின் ஏனைய வருடப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களினது பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுவதிலும் தாமதங்கள் ஏற்படக்கூடிய நிலை உருவாகும்.

இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

(த-14)(32)

# ஆவரங்காலில் விவசாயக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.6

விவசாயத் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் விவசாயக் கண்காட்சியும் நடமாடும் சேவையும் எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 9.30 மணிமுதல் மாலை 5 மணிவரை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸும் மாகாண காணி விவசாயக் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன மீன்பிடி அமைச்சின் செயலாளர் ஜனாப் ஏ.ஆர். எம்.மஹ்ரூப், விவசாயப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஞானச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

கொள்கலன் நாற்று உற்பத்தி, கொள்கலன் பயிர்ச்செய்கை, மண்ணின்றிய விவசாயம், மண் பரிசோதனை செயன்முறை விளக்கம், பயிர்கள் வாரியான விதை மாதிரிகள், நோய்ப் பீடைகளின் மாதிரிகள், பழப்பயிர் மாதிரிகள், தேனீ வளர்ப்புப் போன்ற 23 அம்சங்களை உள்ளடக்கியதாக இக்கண்காட்சி நடைபெறவுள்ளது. (த-202-14) (24)

**நாளை**

பங்குனி 24
வெள்ளிக்கிழமை
07.04.2006
திதி : நவமி
முற்பகல் 11.39
நட்சத்திரம் : பூசம்
முன்னிரவு : 09.59
சுபநேரம் : 06.08 - 07.38
ராகுகாலம் : 10.38 - 12.08
(யாவும் பழைய நேரப்படி)

# பெண்கள், சிறுவர்களுக்கான சட்ட அறிவூட்டல் கருத்தரங்கு

பரந்தன்,ஏப்.6


யாழ். மனித உரிமைகள் இல்லம் வடமராட்சி கிழக்கு தாளையடி பாடசாலை மண்டபத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சட்ட அறிவூட்டல் கருத்தரங்கை நடத்தியது.

பெண்களுக்கான உரிமைகள், சட்ட விதிமுறைகள், சிறுவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம், சித்திர வதையிலிருந்து பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் சுதர்சன், சட்டத்தரணி றெமீடியஸ் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். (த-352-202)

**உதயவாக்கு**

மனிதர் தம் வழியை வகுத்தமைக்கின்றார். ஆனால், அதில் அவரை வழி நடத்துபவரோ ஆண்டவர்.
- விவிலியத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

5, 6, 9, 10, 13 முழத்தில் கூரைமரங்களும் 6, 7, 10 முழத்தில் சலாகைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: 41, துரைராசா வீதி, வண்ணார்பண்ணை. (49009)

நல்ல நிலையில் உள்ள WPGW- XXXX நம்பர் உடைய அலுமினிய Full Body Isuzu 250 வான் உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை). தொடர்பு: 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 2228013. நேரம் 8.30- 6மணி வரை பார்வையிடலாம். (48948)

பாவனையில் உள்ள SISIL குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. WARANTY CARD உண்டு. தொடர்பு: 21, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P: 4590829, 0777319598. (49014)

## வீடு விற்பனைக்கு

உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறையில் 3 பரப்பு காணியுடன் சேர்ந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 270, நாயன்மார்கட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P: 0773256561. (49002)

## மணமகள் தேவை

கனடாவில் குடியுரிமை உடைய யாழ். இந்து கௌரவ குடும்பம் 1971 பூரம், சிங்க ராசி 5'8" உயரம், கிரகபாவம் 13 G.C.E. A/L பிரபல தொழில் அதிபர் மணமகனுக்கு பட்டதாரி அழகான மணமகள் தேவை. தொடர்பு: S.K.சிவகரன் (அமைப்பாளர்) "சிவாலயா சர்வதேச திருமண நிலையம்" இல-11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P:077 6528641. (49017)

## தவறிவிட்டது

சுன்னாகம் மக்கள் வங்கிக்குரிய காசோலையொன்று உடுவிலில் இருந்து முகமாலைக்கு வந்துகொண்டிருந்தபொழுது 3.4.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். T.P: 0777170072, 021 2285102 சன்மானம் வழங்கப்படும். (சி.48701)

கதிரவேலு அன்னலிங்கம் என்பவருடைய தேசிய அ. அட்டை இல.(522693766V) விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன 1.4.2006 சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க.அன்னலிங்கம், கட்டப்பிராய், வட்டக்குளம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது 0777 112439, 021 2226788 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (49016)

## பாதயாத்திரை திருவிழா

கரவெட்டி, ஏப்.6

தவக்காலத்தை முன்னிட்டு வடமராட்சி கிறிஸ்தவர்களுக்கான பாத யாத்திரைத் தலத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை (தவக் காலத்தின் ஆறாவது வெள்ளி) 9- 7 மணி வரைகரவெட்டி வியாகுல அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

தியானம், பாவ சங்கீர்த்தனம் என்னும் ஆன்மீக நிகழ்வுகளுடன் பி.ப.4.30 மணிக்கு சிலுவைப்பாதையும் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும். (த-70-202)(39)

## மருந்தாளர் வெளிவாரிப்பயிற்சி

கொழும்பு, ஏப்.6

வடக்கு- கிழக்கு மாகாண அதிகார அமைச்சால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நடத்தப்பட்ட மருந்தாளர்களுக்கான வெளிவாரிப் பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சை திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளதாக மாகாண இணைப்பாளர் இ.பத்மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சையில் முதலாம் நாள் எழுத்துப் பரீட்சையும் இரண்டாம் நாள் செயல்முறைப் பரீட்சையும் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கான அனுமதிஅட்டைகள் தகுதியான அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்களை மேற்படி பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள பிராந்திய இணைப்பாளர்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-14)

## கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்.6

வட்டு. இந்து நவோதயக் கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் கணனிப் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ள இப் பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் இன்று வியாழக்கிழமை கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று விண்ணபிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-202) (39)

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சங்கப் பணிமனையில் இ.அரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-202) (24)

## பண்ணிசை மனனப்போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.6

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் பண்ணிசை மனனப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கோயிலின் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இணுவில் பொது நூலகம், இணுவில் தெற்கு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுள்ளது.

போட்டிகள் அடுத்த மாதம் 7ஆம்திகதி முற்பகல் 9 மணிக்கு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்கோயில் [illegible] நடைபெறவுள்ளன. (த-202) (24)


### கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உத்தியோகத்தர்
திரு.க.யோகராசா அவர்களின்அன்பு மாமனார்

**அமரர் முத்தையா ஐயாத்துரை**

அவர்கள் 02.04.2006 அன்று காலமானதையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.
(48995) (39-14-15)



ஜெய்குருதேவ்
உலகம் போற்றும் தமிழ்த் துறவி
தவத்திரு
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்
அவர்களின்
மகா சத்சங்கம்
(கானம், தியானம், ஞானம் இவைகள் சங்கமிக்கும் ஓர் இனிய மாலைப்பொழுது)

நாள்: 07.04.2006 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி
இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம்.

30 லட்சம் மக்கள் கலந்துகொண்ட வாழும் கலை நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிக்குப் பிறகு குருஜி கலந்துகொள்ளும் முதல் சத்சங்கம். அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!!

ஜாதி, மத, இன பாகுபாடின்றி அனைவரும் குடும்பசகிதம் வருக! அருளாசி பெறுக!!

அன்பில் மலருங்கள்! உங்களை உணருங்கள்!

அனுமதி இலவசம்

(நிகழ்ச்சியின் நிறைவில் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது)

(48980)

சர்வதேச வாழும் கலை அறநிறுவனம், யாழ்ப்பாணம்
தோ.பே.: 0779059549, 07[illegible]


### மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம்

நிகழும் பங்குனித் திங்கள் 23 ஆம் நாள் இன்று (06.04.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சித்திரை புதுவருடப்பிறப்பன்று தேர்த்திருவிழா நடைபெற்று, 16.04.2006 மாலை வைரவ பூசையுடன் நிறைவு பெறும்.

விளம்பர அனுசரணை:
**கந்தவேலன் றேடேர்ஸ்**
இல.110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
பரிபாலனசபை.
(49013) (39-14-15)

### கண்ணீர் அஞ்சலி



எமது நண்பி
குணாழினியின் அன்புத் தாய்
திருமதி
**செல்வராசா சரஸ்வதி**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லூர் சயன்ஸ் அக்கடமி 2005 O/ L நண்பர்கள்.
(49020) (39-14-15)

### ஈரவிழிகளுடன் 3 ஆம் மாத நினைவஞ்சலி

உதயம்
05-10-1988

அஸ்தமனம்
05-01-2006



**செல்வி கோமதர்சினி பரமேஸ்வரன்** *(சிந்து)*

(யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய 2007 கலைப்பிரிவு மாணவி)

*அன்பின் சிந்து! உன்னுடைய கல்வியின் எதிர்கால இலட்சியங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நீ அதையெல்லாம் நேரில் கண்டு உன் இருகரங்களிலும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை கடவுள் உனக்குத் தரவில்லை. கடவுளுக்கு நீ படித்து நல்ல நிலைமைக்கு வரப்போகின்றாய் என்று பொறுக்கவில்லைப் போலும். கல்விதனில் நீ எண்ணற்ற சாதனைகள் நிலைநாட்டினாய்.*

*நீ எழுதிய பரீட்சைக்கு இப்போது சான்றிதழ்கள், பரிசில்கள் ஏன் அகில இலங்கை மட்டத்திலே இரண்டாம் பரிசாக வெள்ளிப் பதக்கம் எல்லாம். மாணவர்களுக்கும் பதக்கங்கள் கழுத்தில் அணிவித்து படம் எடுக்கப்பட்டபோது உனது பதக்கம் மட்டும் எம் கரங்களில் கையளிக்கப்பட்டது. இதை எம் மனது தாங்குமா? மீண்டும் எம்முடன் வந்து உறவாட இறைவனை வேண்டுகின்றோம்.*

*2005 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சைவபரிபாலன சபைத் தேர்வில் 12 ஆம் தரத்தில் அகில இலங்கை மட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தைப் (2 ஆம் இடம்) பெற்றிருக்கின்றாய்... அதற்காக விண்ணில் வாழும் உன்னை இங்கிருந்து ஈரவிழிகளோடு மீளாத்துயருடன் வாழ்த்துகின்றோம்.*

-குடும்பத்தினர்.

நீ.மு.நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
த.மு.பூம்புகார், இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு.
(49018) (89-14-15)


### அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

769 நீலம்

மேடம்

04-04-2006

செல்லுபடியாகும் தொடர் இல. -4189303 - 4204067

வெற்றி இலக்கங்கள் 16 20 47 48

ஜக்பொட் பரிசு ரூபா 20,88,850/- வெல்லப்பட்டுள்ளது

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 92,22,120/-
தொடர் இல. 5109637 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 07 ஆம் திகதி செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,24,457 | 10/- | 32,44,570/- |
| 2 இலக்கங்கள் | 29,851 | 20/- | 5,97,020/- |
| 1 இல+லக்கினம் | 29,641 | 30/- | 8,89,230/- |
| 2 இல+லக்கினம் | 2,667 | 100/- | 2,66,700/- |
| 3 இலக்கங்கள் | 797 | 500/- | 3,98,500/- |
| 3 இல+லக்கினம் | 77 | 5,000/- | 3,85,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 3,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 20,88,850/- | 20,88,850/- |
| மொத்தம் | 5 | | 81,69,870/- |
| முச்சக்கர வண்டிகள் | | 210,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,87,499 | | 92,22,120/- |

இந்த வெள்ளிக்கிழமை ரூபா 10,00,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 4191809-3-30 |
| மாத்தறை | 4192500-9-92 |
| களுத்துறை | 4195540-6-47 |
| காலி | 4200169-4-94 |
| திருகோணமலை | 4190287-9-04 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு03


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சேது சமுத்திரத்திட்டம்: அ.தி.மு.க. எதிர்ப்பு இக்கட்டில் வைகோ

தமிழர்களின் 150 ஆண்டுகால கனவை நனவாக்கியதாக சேதுசமுத்திரத் திட்டத்தைக் குறிப்பிடுகின்றனர். இத்திட்டம் வருவதற்கு யார் காரணம் என்ற சர்ச்சை குறித்து அடுத்த சில தினங்களில் பொது மேடைகளில் பரபரப்பாகப் பேசப்படும்.

தமிழர்களின் குறிப்பாக தென்மாவட்ட மக்களின் 150 ஆண்டுகாலக் கனவுத்திட்டம் என்று வர்ணிக்கப்படுகிறது இததிட்டம்.

பாக். ஜலசந்தியின் இருபுறமும் கால்வாய் தோண்டி வங்காள விரிகுடாவை மன்னார் வளைகுடாவுடன் இணைத்து கப்பல் போக்குவரத்துக்கு வழி செய்வதுதான் சேது சமுத்திரத் திட்டம்.

இதற்கு அடித்தளம் அமைத்தது முந்தைய பா.ஜ. அரசு. பின்பு மத்தியில் காங்கிரஸ் அரசு பொறுப்பேற்று அதில் தி.மு.கவின் டி.ஆர்.பாலு கப்பல் துறை அமைச்சரானதும் இத்திட்டம் முழு வடிவம் பெற்றது.

இதைத் தொடர்ந்து ரூ. 2 ஆயிரத்து 427 கோடி ரூபா மதிப்பீட்டிலான இந்தத் திட்டத்திற்கு பிரதமர் மன்மோகன்சிங் கடந்த ஜூலை 2ஆம் திகதி மதுரையில் அடிக்கல் நாட்டினார்.

சேது சமுத்திரத் திட்டத்தை தி.மு.க. தனது சாதனையாகக் கூறிவருகிறது.

மேலும், தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ம.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளும் தங்கள் முயற்சிகளால்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறிவருகின்றன.

இதேவேளையில், அ.தி.மு.க. இந்தத் திட்டத்தை முழுமையாக எதிர்க்கிறது. 2001 சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற நடவடிக்கை எடுப்போம் என்று கூறிய அ.தி.மு.க. தற்போது இந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்து வருகிறது.

மீனவர்களில் ஒரு பிரிவினரிடையே இத்திட்டத்திற்கு எதிர்ப்புக் கிளம்பியதுதான் இதற்குக் காரணம். மீனவர்களின் அச்சத்தைப் போக்கிய பின்னர்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அ.தி.மு.க. கூறிவருகிறது.

எனவே, மீனவ மக்கள் வாழும் பகுதியில் தேர்தல் பிரச்சினையாக சேது சமுத்திரத் திட்டத்தை அ.தி.மு.க. கையில் எடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதேவேளையில், அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள ம.தி.மு.கவுக்கோ தர்மசங்கடமான சூழ்நிலை சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற நான்தான் முதல் காரணம் என்று வைகோ கூறிவந்தார். இந்தத் திட்டத்தைச் சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மீனவர்களை முதல்வர் திசைதிருப்புகிறார் என்று குற்றஞ்சாட்டிய வைகோ இன்று அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துள்ளார்.

எனவே, சேது சமுத்திரத்திட்டத்தை தனது சாதனையாக தேர்தல் பிரசாரத்தில் கூறமுடியாத தர்மசங்கடமான சூழ்நிலைக்கு வைகோ தள்ளப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் தேர்தல் பிரசார சுற்றுப்பயணம் மேற்கொண்ட வைகோ, சேதுசமுத்திரத் திட்டம் குறித்து வாய் திறக்கவில்லை.

தமிழகத்தில் உள்ள 13 கடற்கரை மாவட்டங்களில் சுமார் 50 லட்சம் மீனவர்கள் உள்ளனர். இந்த மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான மீனவர்களும் மீனவ அமைப்புகளும் சேது சமுத்திரத் திட்டத்தை கடுமையாக எதிர்த்துவருகின்றனர். வர்த்தகர்களும் வியாபாரிகளும் இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறார்கள். *(நன்றி: தினமணி)*(33)

## ரணில் - ராகுல் சந்திப்பு



இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் புதுடில்லியில் ராகுல் காந்தியை சந்தித்துப் பேசினார்.

இந்தியாவில் இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை முன்னாள் பிரதமரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்கே, சோனியாவின் புதல்வரும், அமேதி தொகுதி எம்.பி.யுமான ராகுல் காந்தியை சந்தித்துப் பேசினார்.

இருவருக்கும் இடையே 15 நிமிடம் நீடித்த இந்தச் சந்திப்பில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான அமைதி முயற்சிகள் குறித்தும், மற்ற விவகாரங்கள் தொடர்பாகவும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர். முன்னதாக ரணில் விக்ரமசிங்க, பிரதமர் மன்மோகன் சிங்கையும், ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியாவையும் சந்தித்து பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)(39)

## சட்டப்பேரவைத் தேர்தல் 2006

## சகல குடும்பங்களுக்கும் ரீ.வி. திட்டம் சாத்தியமற்றது என்கிறார் ஜெயலலிதா



திருவாரூர்,ஏப்.6

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளபடி ஒவ்வொரு குடும்பத்துக்கும் இலவச கலர் ரீ.வி.வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்றது என்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

திருவாரூர் மாவட்டத்தில் வாழவாய்க்கால், பாங்கல் நாற்புற சாலை, திருத்துறைப்பூண்டி ஆகிய பகுதிகளில் செவ்வாய்க்கிழமை தேர்தல் பிரசாரத்தின் போது அவர் உரையாற்றினார். அவர் கூறியதாவது:

குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே கலர் ரி.வி.வழங்குவதென்றாலும் கூட அதற்கு சுமார் 15,000 கோடி ரூபா தேவைப்படும். எனவே இத் திட்டம் நடைமுறை சாத்தியமற்றது; நடைமுறைப்படுத்தவும் முடியாது. இவ்வளவு பெரிய தொகைக்கு அவர்கள் (தி.மு.க) எங்கே போவார்கள்?

காவிரிப் பிரச்சினையை தி.மு.க.கைவிட்டுவிட்டது. காவிரி நதி நீரில் தமிழகத்திற்கு உள்ள உரிமையை உறுதி செய்ய அ.தி.மு.க அரசு தொடர்ந்து போராடி வருகிறது. இது தொடர்பாக அ.தி.மு.க அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததையும், இது தொடர்பாக அ.தி.மு.க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் டெல்டா மாவட்ட விவசாயிகள் நன்கு அறிவர்- என்றார் ஜெயலலிதா. (ஐ) (39)

## மதுரையில் ஒரே மேடையில் ஜெ., வைகோ, திருமாவளவன்

மதுரை,ஏப்.6

மதுரையில் ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெறும் அ.தி.மு.க. கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முதல்வர் ஜெயலலிதா, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலர் தொல். திருமாவளவன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

அ.தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் முதன்முறையாக ஒரே மேடையில் பிரசாரம் மேற்கொள்வது, தென் மாவட்டங்களில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த துரையில்தான்.

மதுரை வடக்கு மாசி வீதி - மேலமாசி வீதி சந்திப்பில் ஏப்.8 பி.ப. 3 மணிக்கு இக் கூட்டம் நடைபெறுகிறது.

இப் பொதுக்கூட்டத்தைச் சிறப்பாக நடத்த அ.தி.மு.க. கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். முதல்வர் வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இரவு நேர வாகன சோதனையும் தொடர்ந்து நடைபெறுகிறது. (ஐ)(33)

## பொதுக்கூட்டத்தில் பேச நெடுமாறனுக்கு அனுமதி



சென்னை,ஏப்.6

'பொடா' சட்டத்தின்கீழ் கைதாகி நிபந்தனையுடன் பிணையில் விடுதலையான நெடுமாறன், சு.ப. வீரபாண்டியன், தாயப்பன் ஆகியோர் பொதுக்கூட்டங்களில் பேசுவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக இவர்கள் 'பொடா' சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால், பேசக்கூடாது என்று உயர்நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

அந்த நிபந்தனையைத் தளர்த்தக்கோரி மூவரும் மனுத்தாக்கல் செய்தனர். நீதிபதிகள் எம். கற்பகவிநாயகம், ஏ.ஆர்.ராமலிங்கம் ஆகியோர் இக்கோரிக்கையை ஏற்றனர். பொதுக்கூட்டங்களில் அவர்கள் பேசலாம். தடை செய்யப்பட்ட இயக்கங்களைப் பற்றி பேசக்கூடாது என்று உத்தரவிட்டனர். (ஐ)(33)

## எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்பை வைகோ இழந்தார்?



சென்னை,ஏப்.6

சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்பை வைகோ இழந்துவிட்டார் என்று தமிழக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

அ.தி.மு.க. கூட்டணியில் 35 தொகுதிகளில் போட்டியிடுகிறது ம.தி.மு.க. 182 தொகுதிகளில் அ.தி.மு.க. போட்டியிடுகிறது. பெரும்பான்மைப் பலத்தை அ.தி.மு.க. பெறுமானால், ம.தி.மு.கவும் 30 இடங்கள் வரைவெற்றிபெறும் என்பது அந்தக் கூட்டணியின் கணக்கு.

அப்படியொரு நிலை வரும்போது தி.மு.க. கூட்டணி மிக மோசமான தோல்வியை சந்திக்க வேண்டியிருக்கும். எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது ம.தி.முகவுக்குக் கிடைக்கும். அப்போது வைகோ தான் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார் என்று ம.தி.மு.கவினர் கணக்குப் போட்டனர். ஒருவேளை தி.மு.க. கூட்டணி ஆட்சி அமைக்கும் நிலை உருவானால், எதிரணியில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவும் தான் பெரிய தலைவர்களாக இருப்பார்கள். அப்போது பேரவைக்கு அதிகமாக வருவதை ஜெயலலிதா தவிர்க்கக்கூடும். எனவே, அப்போதும் பேரவையில் வைகோ தான் எதிரணித் தலைவராக இருந்து ஆளுங்கட்சியினருடன் வாக்குவாதங்களில் மோதுவார் என்றும் அவர்கள் கருதினர்.

ஆனால், சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று வைகோ அறிவித்ததையடுத்து, இந்த வாய்ப்புக்கே இடமில்லாமல் போய்விட்டது. கட்சித் தொண்டர் நலன்தான் முக்கியம். அதற்காகப் பாடுபடுவதற்கு வசதியாகத் தான் தேர்தலில் போட்டியிடவில்லை என்று வைகோ விளக்கமும் தந்துவிட்டார்.

என்னதான் வைகோ சமாதானம் சொன்னாலும் அவர் போட்டியிடாதது தொண்டர்கள் மனதில் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இருந்தாலும், மாநிலங்களவை உறுப்பினர் வாய்ப்பு வரும்போது தங்கள் தலைவருக்கு வாய்ப்புக் கிடைக்கும் என கட்சியினர் நம்புகின்றனர்.

இவ்வாறு 'தினமணி' செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (ஐ)(33)



**நர்மதா அணையை உயர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூகசேவகி மேதா பட்கர் புதுடில்லியில் தொடர்ந்து எட்டாவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார். உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு பிரதமர் மன்மோகசிங் விடுத்த கோரிக்கையை அவர் நிராகரித்துவிட்டார். அவரது உடல் நிலை மோசமடைந்து வருகிறது. (ஐ)(33)**

# ஆப்கான் கூட்டுப்படைகள் மீதான தாக்குதல் 'நட்பு' ரீதியில் நடந்ததா?

## முழு அளவில் புலனாய்வு செய்யத் தீர்மானம்

காபூல்,ஏப்.6

கடந்தவாரம் ஆப்கானிஸ்தானில் ஹெல்மொன்ட் மாகாணத்தில் கூட்டுப்படை நிலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் நட்புரீதியில் இடம்பெற்ற ஒரு சம்பவமா என்பது பற்றி அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை அதிகாரிகள் ஆராய்விருக்கின்றனர்.

மேற்படி சம்பவத்தில் அமெரிக்கரும் ஒரு கனேடியரும் கொல்லப்பட்டிருந்தனர். ஓர் அமெரிக்கப் படைவீரரும் மூன்று கனேடியப் படையினரும் கூட காயமுற்றிருந்தனர். சமீப காலத்தில் ஹெல்மொன்ட் மாகாண மோதல்கள் அதிகரித்துள்ள மையமாக இருந்து வருகின்றது.

நடத்தப்படவிருக்கும் புலனாய்வுகளில் அச்சம்பவத்துடன் தொடர்புடைய சகல அம்சங்களும் துலாம்பரமாகத் தெரியவரும். நட்பு ரீதியிலான துப்பாக்கிப் பிரயோகத்தில் எவரும் பாதிக்கப்பட்டார்களா என்பதும் தெரியவரும் என்று காபூலில் உள்ள கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது. (ப)(33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி டிப்ளோமா விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி நேரம் II இற்கான விரிவுரைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கல்வியாண்டு 2005/2006 இற்கான புதிய கற்கைநெறிகளுக்கான விரிவுரைகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகின.

இதேவேளை, 2004/2005 கல்வியாண்டிற்குரிய பட்டப்பின் பொது நிர்வாகக் கற்கை நெறியின் கணனி அலகுக்கான செய்முறைப் பரீட்சையில் தோற்றத் தவறியவர்களுக்கான விசேட செயன்முறைப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என பட்டப்படிப்புகள்பீடப் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

(த-202)(26)

# மாணவர் கைது கல்விச் சூழலை குழப்பும் திட்டமிட்ட செயல்!

யாழ்ப்பாணம்,ஏப்.6

பருத்தித்துறையில் இராணுவத்தினரால் மாணவர்கள் கைது செய்யப்பட்டமையானது குடாநாட்டில் மாணவர்களின் மத்தியில் கல்வி கற்றலுக்கான சூழ்நிலையைக் குழப்பும் போக்குக்கொண்ட திட்டமிட்ட ஒரு செயலாகும்.

இவ்வாறு கண்டனம் தெரிவித்திருக்கிறது யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியத்தினரால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

02.04.2006 ஞாயிற்றுக்கிழமையன்று பருத்தித்துறை, தும்பளையில் ஹாட்லிக் கல்லூரி மாணவர்களையும், யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களையும் அவர்களின் பெற்றோரையும் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் கைது செய்த நடவடிக்கைகளையும் மாணவர்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சிறுவர் நலன்களில் அக்கறைகாட்டும் மனிதநேய அமைப்புகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் சர்வதேச நாடுகளும் மாணவர்கள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், கைது நடவடிக்கைகளை பார்த்தும் மௌனித்திருப்பது மாணவர்களாகிய எமக்குப் பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது.

சர்வதேச சமூகம் இத்தகைய கைது நடவடிக்கைகள், தாக்குதல்களை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளைக் கண்டிக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களை படையில் இணைக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை சுமத்துவதை விடுத்து ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் சிறுவர்கள் மீதும் மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் செய்துவரும் அச்சுறுத்தும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஹாட்லிக் கல்லூரி மாணவர் மீதான கைது நடவடிக்கை கல்விகற்கும் சூழ்நிலையைக் குழப்பும் போக்கினைக் கொண்ட ஒரு செயலாகவே நாம் கருதுகின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

(த)(39)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 - 06 - 1959



ஆண்டவன் அடியில் 30 - 03 - 2004

### அருளம்பலம் கிருஷ்ணமோகன்

*(துளசி வர்த்தக நிலையம், இருபாலைச் சந்தி)*

எம் இதயக் கோயிலில் வீற்றிருக்கும்
எம் அன்புத் தெய்வமே!
கண்முன்னே நீங்கள் இல்லை
எம்மோடு உறவாட
கனவுலகில் வந்து எங்களை பார்க்கின்றீர்கள்
இறுதி வரை எம்மோடு சேர்ந்து இருப்பீர்
என்று இருந்தோம்
இடை நடுவே தவிக்கவிட்டு ஏன்
அப்பா போனீர்கள்?
காலையில் எழுந்ததும் உங்கள் திருமுகத்தை
பார்த்த வண்ணம் எழும்புகின்றோம்
மீண்டும் ஒரு ஜென்மம் எடுத்து
எங்கள் குடும்பத்தில் வந்து
பிறக்க வேண்டுமென எல்லாம்
வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இருபாலைச் சந்தி,
கோப்பாய்.
(49004) (39.21.11.16)

தாய், மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## தேவை

*கணனி அறிவுள்ள (வீடியோ மிக்சிங், போட்டோசொப் &போட்டோ கிரபிக்) ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.* (41001)(21.11.16)

தொடர்பு: **தீஷன் வீடியோ**

T.P.: 077 6165410, 021 222 6448

## தாதிப்பயிற்சி

தாதிப்பயிற்சி பெற விரும்பும் பெண் பிள்ளைகள் 06.04.2006, 07.04.2006 ஆம் திகதிகளில் நேரில் வரவும்.

**சு.பாலசுப்பிரமணியம்**

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

08, ராமையாச் செட்டியார் லேன்,
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
(48937) யாழ்ப்பாணம். (21.11.16)

## வைத்திய சேவை

குழந்தைகளின் ரோகங்கள்,
வாதரோகங்கள், மலேரியா, நீரிழிவு,
உடல் பருமன், உடல் மெலிவு,
தலைமுடி நரைத்தல்,
தலைமுடி உதிர்தல் முதலான சகல
நோய்களுக்கும் சிகிச்சை
அளிக்கப்படும்.

டாக்டர் **த.சிவானந்தன்**
*'ஹோப் கிளினிக்'*
**(HOPE CLINIC)**
264, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(48965)

## மரண அறிவித்தல்

### றெஜினோல்ட் ஜெயசீலன்



ஏழாலை தெற்கு, சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட றெஜினோல்ட் ஜெயசீலன் அவர்கள் 04.04.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செபஸ்ரியான் துரைசாமி, காலஞ்சென்ற பிலோமினா நவமணியின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை, பாக்கியத்தின் மருமகனும் அருட்சகோதரி மார்சலீனாவின் மருமகனும் அருட் சகோதரி இனசன்சியாவின் பெறாமகனும் திருமதி வசந்தி ஜெயசீலனின் அன்புக் கணவரும் பிரியாந்தி, கஜேந்திரன், டிலாந்தி, சுஜிவன், றெக்னோ ஆகியோரின் பாசமிகு தந்தையும் நேசராணி, அருட்சகோதரி ஸ்ரெலா துரைசாமி (தி.கு), பத்மினி (கிளி), ஜெயபாலன், ஜெயக்குமார் ஆகியோரின் அருமைச் சகோதரனும் பாக்கியநாதன்,பாலா, யோகராணி, றதினி, இம்மானுவேல், செல்வமலர், மேசி, ரஞ்சிதமலர், காலஞ்சென்ற கபிரியேல், பற்றிக், வின்சன் ஆகியோரின் மைத்துனரும் பிரவின், துஷி, மினோஜ், கிறிஷா, நிலுக்ஷனா, மானல், கொலின், நிம்மி, லக்சி, மயூரன், விஜி, விஜிகரன், சுபா, சஞ்சித், நிலாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஹர்ஷினி, அன்றூ, லக்ஷன், டெஸ்மன், வேணு, டெறிக் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.04.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்.* (49006)(39.21.11.16)

தகவல்:
*வசந்தி ஜெயசீலன்*
*(மனைவி).*

# 4ஆவது அகவையில் காலடிபதிக்கும் மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி

### உங்கள் கரங்களைப் பற்றி எழுந்து... நான்காவது அகவையில் காலடி பதிக்கிறது

தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய்க் கிளையானது இன்று தனது மூன்றாவது அகவையைப் பூர்த்திசெய்து நான்காவது ஆண்டில் மக்கள் சேவையில் இணைந்து வீறுநடையுடன் காலடி எடுத்துவைக்கிறது என்ற செய்தி எம்மையெல்லாம் புளகாங்கிதம் அடையச் செய்கிறது.

குறுகியகால சேவையில் எமது வங்கி மானிப்பாயில் தனது அகலக்காலினை விரித்து ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்திருப்பதுடன், அவர்களின் அளப்பெரும் தேவையினையும் பூர்த்தி செய்துள்ளது. இன்னும் பூர்த்திசெய்வதற்கு அது திடசங்கற்பத்தினை இந்நன்நாளில் பூண்டுள்ளது.

மக்களுக்கான தேவைகளை உணர்ந்து அடகு வசதிகள் மற்றும் கடன் வசதிகள், கவர்ச்சிகரமான வட்டிகளுடன் கூடிய பொற்கணக்குகள் என்பவற்றைத் துரிதகதியில் செய்து வருகின்றது எமது வங்கி என்று கூறிக்கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

நான்காவது ஆண்டில் வெற்றிநடை போடும் எமது வங்கியின் வளர்ச்சிக்கு மக்களின் அமோக ஆதரவுக்கரங்கள்தான் காரணம். இத்தகைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்தும் நீங்கள் வழங்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

ப.சச்சிதானந்தம்
முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
மானிப்பாய்.

(48982)(21.11.16.24)




### உதவிப் பொது முகாமையாளரின் வாழ்த்துச்செய்தி

மூன்று ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து நான்காவது ஆண்டில் காலடி பதிக்கும் மானிப்பாய்க் கிளையை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு பணியாற்றும் சகலரும் நேர்மைத் திறனுடனும் காரியசித்தியுடனும் தமது பணிகளைச் சிறப்புடன் ஆற்றவும் எனது வாழ்த்துக்களைக் கூறுகின்றேன். நான்கு ஆண்டுகள் மட்டுமல்ல, 400 ஆண்டுகளுக்கு மேலும் இவ்வங்கி தனது பணிகளைத் தொடர்ந்து ஆற்றப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.இ.ஈஸ்வரலிங்கம்**
உதவிப் பொதுமுகாமையாளர் (வடக்கு - கிழக்கு).

### இதயபூர்வமான வாழ்த்துக்கள்

எமது வங்கியின் மானிப்பாய்க் கிளையின் 3ஆம் வருட நிறைவு நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். ஆரம்பித்த காலம்முதல் வைப்புகளைத் திரட்டுவதிலும் வாடிக்கையாளர் தேவைகளை அறிந்துசெயற்படுவதிலும் முகாமையாளர், ஊழியர்கள் பெரும்பங்காற்றியுள்ளனர். அவர்களது அர்ப்பணிப்புமிக்க சேவையும் எமது வாடிக்கையாளர் தரும் ஒத்துழைப்புக்களும் வங்கியை உன்னத நிலைக்கு உயர்த்தியுள்ளது. இந்நிலை மென்மேலும் பெருகி இக்கிளையானது மேலும் வளர்ச்சியடைய எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், இவ்வுயரிய நிலையை அடைவதற்கு உதவிபுரியும் வாடிக்கையாளர்கள், ஊழியர்களுக்கு வலய முகாமையாளர் என்ற வகையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம்.சிவானந்தா**
வலய முகாமையாளர் வடக்கு - கிழக்கு, தேசிய சேமிப்பு வங்கி.

விளம்பர அனுசரணை:

**சுந்தர்சன்**
சந்தை வீதி, மானிப்பாய்.
T.P.: 021 222 2751, Fax:021 222 2751

**நந்தா ரெக்ஸ்ரைல் அன் பான்சி**
யாழ். வீதி, மானிப்பாய்.
T.P.: 021 4591695

**ஐங்கரன் மோட்டோர்ஸ்**
சந்தை வீதி, மானிப்பாய்.
T.P.: 021 222 5412

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் இணைப்பு

அக்கராயன்,ஏப்.6

முல்லைத்தீவு துணுக்காய் அம்பலப் பெருமாள்குளம் பாடசாலை கோட்டை கட்டிகுளம் பாடசாலையுடன் இணைக்கப் பட்டுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் மிகவும் பின்தங்கிய பாடசாலையாக அம்பலப்பெரு மாள் குளம் பாடசாலை உள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் 55 வரை யான பாடசாலைகள் உள்ளன.

இவற்றில் பல பாடசாலைகள் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றன.

போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் துணுக் காய் வலயப் பாடசாலைகளில் பௌதிக ஆளணி வள ரீதியான முன்னேற்றம் ஏற்பட வில்லை.

இதேவேளை - துணுக்காய், பழைய முறி கண்டி பாடசாலையைப் புத்துவெட்டுவான் பாடசாலையுடன் இணைப்பதற்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(த-420) (24)



கிளிநொச்சி அக்கராயன் யூனியன் குளம் பாடசாலையில் புதிய கட்டடத் திறப்பு விழாவும் இல்லமெய்வன்மைப் போட்டியும் அண்மையில் ஒரேநாளில் நடைபெற்றன.

புதிய கட்டடத்தினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா திறந்து வைப்பதையும் இல்ல மெய்வன்மைப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.பத்மநாதன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அக்கராயன் செய்தியாளர்)




# குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்துவந்து அக்கராயனில் குடியேறியோருக்கு வீடுகள்

பரந்தன்,ஏப்.6

யாழ். மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து வன்னியில் அக்கராயன் பிரதேசத் தில் வசிக்கும் 42 குடும்பங்களுக்குக் காணி களும் வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அக்கராயன் சுபாஸ் குடியிருப்பில் வீடு களும் காணிகளும் மக்களுக்கு வழங்கப்பட் டுள்ளன.

வீடுகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழீழ காணிப் பகுதிப் பொறுப்பாளர் கான கன், அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.மாறன் மற்றும் கிராமமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு குடும்பங்களுக்கும் அரை ஏக்கர் காணியும் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடும் சொந்தமாக வழங்கப்பட்டுள்ளன. தமிழீழ நிர்வாக சேவை இதனை வழங்கியுள்ளது.

ஏனைய 37 குடும்பங்களுக்கு விரைவில் காணியும் வீடும் வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.மறவன் தெரிவித்தார்.

(த-352-202) (24)

# ஊரியான் கிராமத்தில் அபிவிருத்திப் பணிகள்

பரந்தன்,ஏப்.6

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரி வில் உள்ள ஊரியான் கிராமத்தில் 2006ஆம் ஆண்டுக்கான வடக்கு - கிழக்குக் கிராம கரையோர அபிவிருத்தித் திட்டத்தில் 37 லட் சம் ரூபா செலவில் முக்கிய நான்கு வேலைத் திட்டங்கள் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட வுள்ளன.

பொருண்மிய மதியுரையகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 'நெஸ்டெப்' திட்டத்தின்கீழ் இந்தப் பணிகள் முன்னெடுக் கப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 6 லட்சம் ரூபா செல வில் மீனவர் ஓய்வுமண்டபமும் -

18 லட்சம் ரூபா செலவில் தொழில் பயிற்சி நிலையமும் -

9 லட்சம் ரூபா செலவில் பால் சேகரிப்பு நிலையமும் -

4 லட்சம் ரூபா செலவில் பொக்கணைக் குளம் கழிவுவாய்க்காலுக்கான பாலமும் அமைக்கப்படவுள்ளன.

(த-352-203) (24)

# ஸ்கந்தபுரம் மரப்பால வீதி புனரமைக்கப்படுகிறது

மிகநீண்டகாலமாகப் பாதிப்படைந்து காணப்பட்ட ஸ்கந்தபுரம் மரப்பால வீதி 70 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

வீதி அபிவிருத்தித் திணைக்களமும் 'நிகொட்' நிறுவனமும் இப்புனரமைப்புக்கு நிதி வழங்க முன்வந்துள்ளன.

சுடர் நிர்மாணதாரரினால் இந்த ஒப்பந்த வேலை பொறுப்பேற்கப்பட்டு செயற்படுத் தப்பட்டு வருகின்றது. இதில் பிரதான இடங் களில் பாலம், கல்வெட்டு என்பன அமைக் கப்பட்டு வருகின்றன. இவ்வீதியின் 1.5 கிலோமீற்றர் தூரம் தார் ஊற்றி செப்பனிட வும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

முன்பு இவ்வீதியில் வெள்ளம் பாய்ந் தோடுவதால் அதனால் ஏற்பட்ட மண்ணரிப் பினால் மக்கள் போக்குவரத்திற்கு மிகுந்த சிரமமேற்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக் கது.

(த-381) (24)



தற்போது திருத்தப்பட்டுவரும் ஸ்கந்தபுரம் மரப்பால வீதியின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.

(படம்: ஸ்கந்தபுரம் செய்தியாளர்)

# முழங்காவில் வித்தியாலய அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வட்டக்கச்சி,ஏப்.6

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முழங் காவில் மகாவித்தியாலயத்தின் அதிபர் பத விக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

Iஏபி தரப் பாடசாலையான இப்பாடசா லைக்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு II அல்லது வகுப்பு III அல்லது இலங்கை அதிபர் சேவை வகுப்பு I அல்லது அதிபர் சேவை வகுப்பு 2-I ஆக இருப்பதுடன் பட்டதாரி யாகவும் இருத்தல் வேண்டும்.

இவ்வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் விண் ணப்பிக்காதவிடத்து கடமை நிறைவேற்றும் அதிபரை நியமிப்பதற்கு இலங்கை ஆசிரி யர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த பட்டதாரி இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I ஐச் சேர்ந்த பயிற்றப்பட்ட பட்டதாரி ஆகியோ ரது விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படும் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப் பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார்.

தகைமையுடையவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் தமது சுயவிவரம் அடங் கிய விண்ணப்பத்தினை வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-405) (24)

# தமிழீழத் தேசிய அடையாள அட்டை; வேண்டுகைகளைப் பெற அறிவுறுத்து

தமிழீழ தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான வேண்டுகைகளைத் தத் தமது பிரதேசத்தில் அமைந்துள்ள போக்கு வரத்துக் கண்காணிப்புச் செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தமிழீழ ஆள்பதி வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பான மேலதிக விவரங் களைப் பிரதேச போக்குவரத்துக் கண்காணிப் புச் செயலகங்களில் உள்ள ஆள்பதிவுத் திணைக்க அலுவலரிடம் பெற்றுக்கொள்ள லாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-405) (24)

# வடமராட்சி கிழக்கு மக்களின் வாழ்வை மேம்படுத்த 'சொலிடார்' நிறுவனம் உதவி

பரந்தன்,ஏப்.6

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேச மக் களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற் கான பல வேலைத்திட்டங்களை 'சொலிடார்' நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

கடந்த 28ஆம் திகதி உடுத்துறை கிராம பொதுநோக்க மண்டபத்தில் கிராம மக்களுக் கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற் றது. நிறுவனத்தின் எஸ்.ஏ.எஸ். பிரதி நிகழ்ச் சித்திட்ட முகாமையாளர் க.இரவி தலை மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, சுவிஸ் தொழிலாளர் உதவி நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி கரின் வொயிட், வடம ராட்சி கிழக்கு திட்டமிடல் செயலகப் பொறுப்பாளர் பாலையா, 'சொலிடார்' நிறு வன நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் கத்த ரின் வைக்மன், சொலிடார் நிறுவன கட்டடக் கலைஞரும் நிகழ்ச்சித்திட்ட முகாமையா ளருமான சபாநாகநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

உடுத்துறைக் கிராம மக்களின் வாழ்வா தாரத்தைக் கூட்டுதல், பொது உட்கட்டுமா னப் பணிகளின் வசதிகளுக்கான செயற்றிட் டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற வேலைத்திட்டங்களை நிறுவனம் ஆரம்பிக் கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-352-202)(32)



கிளிநொச்சி மாவட்டத் திருநெறிக் கழகத்தினரால் கடந்த 26ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட 'சித்தாந்தக் கருத்தரங்கு' நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வின் முதல் அமர்வின் தலைவரான கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் தலைமை உரையாற்றுவதையும் கருத்து வழங்கிய விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)(24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கிராமங்களுக்கு மின்சார
விநியோகத்திற்கும்,
ஊரக வளர்ச்சிக்கும் தனது
பன்முகப்படுத்தப்பட்ட
வரவு- செலவின் கீழ்
நிதியுதவியினை வழங்கிய
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு

**கி.சிவனேசன் ஐயா**

அவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:

**தூப்புலம் - கோம்பு,**
**இமையாணன் மேற்கு,**
**உடுப்பிட்டி.**

**தூரப்புலம் - கோம்பு**
**வாழ்மக்கள்.**
**ஜீவகன் சனசமூக நிலையம்.**

(48981)(21.14.15.26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் கண்ணீர் அஞ்சலியும்

07.03.2006 அன்று காலஞ்சென்ற எமது
பாடசாலையில் கடமையாற்றும் சக ஆசிரியை
**செல்வி த.சரோஜினிதேவி** அவர்களின் அன்புத் தாய்
திருமதி **தாமோதரம்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(48485)(14.15.26)

**யா/அராலி இந்துக்கல்லூரி**
**பாடசாலைச் சமூகத்தினர்.**

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



**ஐயாத்துரை**
**பாஸ்கரன்**
**(பாஸ்)**
**நாட்டுப்பற்றாளர்**

மலர்வு
04-09-1979

வீரச்சாவு
06-01-2006

விழிகள் கரைகின்றன
வேதனை முடியுதே இல்லை
நெஞ்சே - உம் மனைவியையும்
பாசப்பிள்ளைகளையும்
நண்பர்களையும்
தவிக்கவிட்டு சென்றதெங்கே.....

உன் பிரிவால் துயருற்றுக்
கொண்டிருக்கும்

**செல்வா விளையாட்டுக்**
**கழகம்**

குடத்தனை வடக்கு,
குடத்தனை.

(48947)(14.15.26)

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

குருநகர்,ஏப்.6

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் நல்லூர்க் கோட்டத்தில் உள்ள 40 பாடசாலைகளுக்கு நல்லூர்க் கோட்டக் கல்வி அலுவலகத்தினால் இலவசமாக வழங்கப்படவுள்ளன என்று நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் தெரிவித்தார். மாதிரி வினாத்தாள்கள் பாடசாலை அதிபர்கள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஐந்து தொகுதிகளாக வழங்கப்படவுள்ள இம் மாதிரி வினாத்தாள்களின் முதலாம் கட்ட வினாத்தாள்கள் இன்று வியாழக் கிழமை வழங்கப்படவுள்ளன. இவ் வினாத்தாள்களை உரிய பாடசாலை அதிபர்கள் நல்லூர்க் கல்விக் கோட்டத்துக்கு இன்று வருகை தந்து தவறாது பெற்றுச் செல்லு மாறும் இவை இலவசமாகவே வழங்கப்படவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

(ஓ-51)(26)

## மதிப்பீட்டு பரீட்சை

தென்மராட்சி,ஏப்.6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 'ஒவ்வர்' நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படும் தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பாட மதிப்பீட்டுப் பரீட்சை நாளை வெள்ளிக் கிழமை நடத்தப்படவுள்ளன.

இப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்து எதிர்வரும் 12 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் செயலமர்வுக்கு கொண்டு வருமாறு பாட ஆசிரியர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

(ஓ-117)(22)

## 6 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

தோற்றம்
27-02-1942
மறைவு
05-01-1971



தோற்றம்
06-11-1942
மறைவு
13-04-2000

**சதாசிவம் சற்குணசிங்கம்**

**சற்குணசிங்கம் விஜயலட்சுமி**
(இராசாத்தி)

**4ஆம் வட்டாரம், மண்டைதீவு**
**திதி:06-04-2006**

**உங்களை உரமாக்கி எங்களை உருவாக்கிய**
**அன்புத் தெய்வங்களே-எத்தனை**
**ஆண்டுகள் சென்றாலும் உங்களைப்**
**பிரிந்த துயர் ஆறாது**
**உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.**

*450, கரியாலை,*
*நாகபடுவான், கிளிநொச்சி.*

(48998)(26.15.14)

மகள், மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தாயின் மடியில்*
*27 - 03 - 1946*



*இறைவன் அடியில்*
*06 - 04 - 2005*

# சின்னப்பு சுப்பையா பொன்னுத்துரை

**(பொன்மலர் ஸ்ரோர், Sun Brand உரிமையாளர்)**

**திதி : 26.03.2006**

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எம்மையெல்லாம்
இத்தரணியில் வாழ வழிவகுத்த எமதன்பு அப்பாவே!
எம்மிடம் இருந்து காலனும் உம்மைப்பிரித்து
ஆண்டு ஒன்று உருண்டோடியதோ நெஞ்சமோ
மறக்கவில்லை அப்பா! நினைவோ அழியவில்லை அப்பா!
அன்பையும் பாசத்தையும் பொழிந்த நீங்கள்- எம்மை
எல்லாம் நல்வழிப்படுத்தி எம் உயர்வுக்கு எம்முடன்
இருப்பீர்கள் என நினைத்தோம் ஏமாற்றிவிட்டு ஒரு
நொடியில் எம்மை விட்டுப் பிரிந்தது ஏன் அப்பா? உங்கள்
நினைவலைகளைச் சுமந்து நிற்கின்றோம் அப்பா!

உங்கள் நினைவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதர சகோதரிகள்,**
**மைத்துன மைத்துனிகள்,**
**மருமக்கள்.**

*அளவெட்டி.*

(48946)(14.15.26)


**யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்**

**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்**



**Style Park**

Perfect Collection

**ஸ்ரைல் பார்க்**



அனைத்து வகையான
கடன் அட்டைகளும்
ஏற்றுக்கொள்ளப்படும்

MasterCard
VISA

முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த
விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள்
அழகியபுடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383

இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர சபைப் பிரதேசத்தில் திண்மக் கழிவகற்ற புதிய நடைமுறை

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவகற்றலில் புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

யாழ்.பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற திண்மக்கழிவகற்றல் பற்றிய பயிற்சிப் பட்டறையில் புதிய நடைமுறைகளுக்கான தீர்மானங்கள் எட்டப்பட்டன.

புதிய நடைமுறைகள் வருமாறு:-

உணவகங்கள் மற்றும் விடுதிகளில் பொலித்தீன் பாவனையைப் படிப்படியாகக் கட்டுப்படுத்தி அதற்குப் பதிலாக வாழை இலை, தாமரை இலை பாவனையை ஊக்குவித்து அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தவிர்த்தல்

திண்மக்கழிவகற்றல் பற்றிப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வையூட்டும் நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதலும் வலயச் செயலாற்றுக் குழுக்களுடன் இணைந்து வீடு வீடாகச் சென்று விளக்கமளித்தலும்-

வீதியோரங்களில் வீசப்படும் கழிவுகளைக் குறைக்கும் நோக்கில் மரக்கிளைகள், வாழைக்குற்றிகள் போன்றவற்றுக்கு கட்டணம் அறவிடும் நடைமுறையை அமுல் செய்வதற்கு வசதியாக சகல சுகாதார மேற்பார்வையாளர்களுக்கும் பற்றுச்சீட்டுப் புத்தகங்களை வழங்குதல்.

ஆகிய தீர்மானங்களே எட்டப்பட்டுள்ளன. (ஒ) (32)

# மல்லாகம் நீதிமன்றில் பகிரங்க ஏலம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

மல்லாகம் மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்று நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், குத்துவிளக்குகள், தூண்டாமணி விளக்குகள், கற்பூர தீபம், ஆலயமணி என்பனவே ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

அன்றைய தினம் ஏல நேரத்திற்கு அரை மணிநேரம் முன்னதாக விற்பனைப் பொருள்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

பகிரங்க ஏலத்தில் வாங்கப்படும் பொருள்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றப் பதிவாளர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ) (32)

# முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

குருநகர்,ஏப்.6

குருநகர் றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவகர் பிரிவில் முதியோர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. யாழ். பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் திருமதி பெ.பாலகுமாரன் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் அ.பெனடிக்ற் தலைவராகவும், மோ.எட்வேட் உபதலைவராகவும், து.மரியரட்ணம் செயலாளராகவும், க.யோகரட்ணம் பொருளாளராகவும், சூ.வேதநாயகம், த.அந்தோனிப்பிள்ளை, ஞா.செபமாலை, அ.புளோறா, அ.விக்ரோறியா ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் சுமார் 60 முதியோர்கள் கலந்துகொண்டனர். (ஒ-51)(32)

# தையல், மனையியல் கண்காட்சி

வலி.கிழக்கு,ஏப்.6

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் மகளிர் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய மாபெரும் தையல், மனையியல் கண்காட்சி எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இருநாள் நிகழ்வுகளுக்கும் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி தலைமை வகிப்பார்.

முதல்நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேசும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, கிராம அபிவிருத்தி திட்ட உதவிப் பணிப்பாளர் வி.குமாரசிங்கம், பிராந்திய ஆணையாளர் பத்தினி சிவலிங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி திணக்களத்தின் பணிப்பாளர் செல்வி து.விஜயலட்சுமியும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை, கிராம அபிவிருத்தி திணைக்கள கணக்காளர் ஆ.இரகுநாதன், முன்னாள் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரட்ணம் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (த-180)(32)

# கசிப்பு விற்பனை; பெண்மணிக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

கசிப்பு விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றத்தின் பேரில் பெண்மணி ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் 20ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

உரும்பிராயைச் சேர்ந்த பெண்மணி ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த இப்பெண்மணியை கோப்பாய் பொலீஸார் கைதுசெய்து யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் குறிப்பிட்ட பெண்மணிக்கு தண்டப் பணமாக 15ஆயிரம் ரூபாவும் தர்மப்பணமாக 5ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஒ-13-14)(32)

# உடுவில் பிரதேச விவசாயிகளுக்கு

வலி.தென்மேற்கு,ஏப்.6

யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்களம் 2006ஆம் ஆண்டுக்கான கமத்தொழில் நெற்காணி இடாப்புகள் புதிதாகத் தயாரிக்கப்படவேண்டும் என்று விடுத்த அறிவிப்புக்கிணங்க உடுவில் கமநல சேவை நிலையப் பிரிவிலும் நெற்காணிகளை இடாப்பில் பதிவுசெய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விவசாயிகள் தமது பகுதியிலுள்ள விவசாய சம்மேளனத்துடன் தொடர்புகொண்டு உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி காணி உறுதி அல்லது குத்தகைக்காணி உரிமைக் கடிதம் ஆகியவற்றின் நிழல் பிரதியையும் இணைத்து எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என்று உடுவில் கமநலசேவை நிலைய அதிகாரி தெரிவித்தார். (ஒ-135)(32)

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் விரைவில் விஞ்ஞான வளநிலையம்

கோப்பாய்,ஏப்.6

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் விஞ்ஞான வள நிலையம் இம் மாத இறுதி முதல் தொழிற்படவுள்ளது.

இதற்கொன கோப்பாய்- மானிப்பாய் வீதியில் கட்டடம் தெரிவு செய்யப்பட்டு ஆரம்ப கட்ட பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. விஞ்ஞான நிலையத்துக்குத் தேவையான உபகரணங்கள் யாவும் கொள்வனவு செய்யப்பட்டு அடுத்த வாரமளவில் வந்து சேருமெனவும் அவை உடனடியாகப் பொருத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் இப்பிரதேசத்தின் விஞ்ஞான ரீதியான தொழில்நுட்ப திட்டங்களை முன்னெடுக்கும் வாய்ப்பு ஏற்படும். அத்துடன் தற்போது விஞ்ஞான தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி செயற்படும் தொழிற்துறைக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி அவற்றை மேம்பாடடையச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த விஞ்ஞான வள நிலையம் யாழ். மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலேயே முதன்முதலாக தொழிற்படவுள்ளதாக மேற்படி நிலைய விஞ்ஞான தொழில்நுட்ப அதிகாரி சி.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ-72)

# வாழைநார் உற்பத்திப் பயிற்சி

கோப்பாய்,ஏப்.6

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் வாழைநார் உற்பத்தி பயிற்சிநெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென தொழிற்துறை திணைக்களம் மூன்று லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இப்பயிற்சி நெறி முன்னர் யாழ்.பிரதேச செயலகத்தில் நடைபெற இருந்த போதிலும் வாழைச்செய்கை கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலேயே அதிகமென்பதால் தற்போது கோப்பாய் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-72)(32)




# செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் யாழ்.வைத்தியசாலையில் சேவை

நல்லூர்,ஏப்.6

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக்கிளையைச் சேர்ந்த தொண்டர்கள் யாழ்.போதனாவைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை முதல் இந்தச் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இந்தச் சேவை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பதினான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட தொண்டர்கள் இச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சிற்றூழியர் வெற்றிடங்களில் இவர்கள் பணியாற்றுகின்றனர். (ஒ-111)(32)



வடமராட்சி லயன்ஸ் கழகம் அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இலவச வைத்தியசேவை முகாமை நடத்தியது. இதில் வைத்தியர்கள் நோயாளர்களைப் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம். (படம்: சி.சுந்தரலிங்கம்)

# தென்மராட்சி பிரதேச செயலகத்தில் காணாமற்போனோருக்கான பதிவு

தென்மராட்சி,ஏப்.6

கடந்த காலங்களில் காணாமற்போனவர்களுக்கான இறப்புப் பதிவு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்படி பயங்கரவாத, நாசகாரச் செயற்பாட்டினால் அல்லது குடியமைதிக் குலைவினால் காணாமற் போனோர்-

இயற்கை அனர்த்தங்களின்போது அல்லது போரிடர்களின்போது காணாமற்போனோர் - ஆகியோரை இறந்தவர்களாகக் கருதி மரணப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கூறிய வகைகளில் எவராவது காணாமற்போயிருப்பின் காணாமற்போனவரின் நேரடி உறவினர்கள் பிரதேச செயலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-117)(32)

## தவக்காலச் சிந்தனை 37

### வார்த்தையின் வழியில் வாழ்வு

இறைவனின் வார்த்தை காலம் கடந்தது. ஞாலத்தைப் படைத்து வாழ்வின் ஊற்றாம் கடவுளிடமிருந்து இது புறப்படுவதால் வாழ்வனைத்திற்கும் காரணமானது. அவரின் அன்பை மனிதருக்குக் கொண்டுவருவதும் அந்த அன்பில் அவர்களை நிலைக்க வைப்பதும் இதன் பணி. இந்த வார்த்தை இயேசுவில் மனித வடிவம் பெற்று மனிதர்கள் நடுவில் வாழ்ந்தது. அவரின் வார்த்தையைக் கடைப்பிடிப்பவர் சாவின் ஆதிக்கத்திலிருந்து விடுப்புப் பெற்றவர்களாகின்றனர். உண்மையால் தூய்மையாக்கப்படுகின்றனர். ஏனெனில் உண்மையின் உறைவிடமாகத் தந்தையின் திருவுளத்தை இந்த வார்த்தை அறிவிக்கின்றது.

இயேசுவின் மீது காழ்ப்புணர்வைக் கொட்டுபவர் விதபராக யூதர்கள் 'நீ சமாரியன், பேய் பிடித்தவன்' எனத்திட்டுகிறார்கள். இயேசு அவர்களுக்குப் பதில் கூறுகையில், பேய் பிடித்தவன் என்பதை மட்டுமே மறுக்கின்றார். பிறப்பால் அவர் சமாரியன் அல்ல, தாழ்த்தப்பட்டவர்கள், பாவிகள், புறவினத்தார் ஆகியோர் இயேசுவின் இலக்கு மக்களாக இருந்ததால் தன்னை சமாரியனாக்கிக்கொள்கிறார். பெருமை எது என்பதற்கு இயேசு விளக்கம் தருகிறார். பட்டங்கள் பெறுதல், தன்னைச் சுற்றி நலன்விரும்பிகளைக் கூட்டமாக வைத்துக்கொள்ளுதல் போன்றவை பெருமையாக இன்று கருதப்படுகிறது. உண்மையைச் சார்ந்து வாழ்ந்து அதைப் பறைசாற்றுவதும் அதன் வழியாக விண்ணகத்தைச் சொந்தமாக்கிக் கொள்வதில் தான் உண்மையான பெருமை இருக்கிறது.

இறைவாக்கினர்கள், வேதசாட்சிகள், முழு ஞானத்துடன் இறைவனிலும் அவர் வார்த்தையிலும் நம்பிக்கை வைத்து வாழ்ந்தனர். அதேபோல் நாங்களும் இறைவனில் நம்பிக்கை வைத்து இயேசுவின் பாடுகளைத் தியானித்து அவற்றிற்கு ஏற்றவாறு எம் வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

- ம.நியூட்டன், சில்லாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இடைவேளை நிகழ்வின் போது இடம்பெற்ற இசையும் அசைவும் நிகழ்வின் ஒரு காட்சியையும் - விநோத உடை நிகழ்வின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம். (படங்கள் : வட்டக்கச்சி செய்தியாளர்)(23)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

நல்லூர்,ஏப்.6

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கு யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பு கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட் ஆகிய விளையாட்டுகளுக்கான உபகரணங்களை வழங்கியுள்ளது.

இந்த உபகரணங்களை யாழ்.மாவட்ட சர்வோதய இணைப்பாளர் இ.சிவசுப்பிரமணியம் நிலையத் தலைவர், விளையாட்டுக் கழகத் தலைவர் ஆகியோரிடம் கடந்த திங்கட்கிழமை கையளித்தார்.

(203-111)(26)

## பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் 7 கழகங்கள் பங்குபற்றுகின்றன. (த-190)(32)

## மாகாண மட்ட, மேசைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.6

வடக்கு-கிழக்கு மாகாணமட்ட மேசைப் பந்தாட்டப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி றொகான் இராஜசிங்கம் தெரிவித்துள்ளார். (த-190)(26)

## கிளிநொச்சி மத்திய கல்லூரி கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

வட்டக்கச்சி, ஏப்.6

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் 19 வயது ஆண்கள் பிரிவுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் கிளிநொச்சி மத்தியகல்லூரி அணி வெற்றிபெற்று மாவட்டச் சம்பியனானது.

இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிகளுக்கிடையில் போட்டி நடைபெற்றது. இவ்விரு அணிகளும் மாகாண மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன. (த-405)




## சில்வர் ஸ்ரார் வி.க. சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.6

வலி.மேற்கு பிரதேச விளையாட்டு விழாவின் உதைபந்தாட்டப் போட்டியில் சில்வர் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அண்மையில் இடம்பெற்ற இந்த உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய அராலி வடக்கு சில்வர் ஸ்ரார் வி.க. வெற்றியீட்டி வெற்றிக்கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-202)(25)

## முல்லைத்தீவு பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள்

மல்லாவி,ஏப்.6

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி கடந்த 29 ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்போட்டியின் முடிவுகள் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

முதலாமிடம்- மல்லாவி மத்திய கல்லூரி, இரண்டாமிடம் - கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, மூன்றாமிடம் -புதுக்குடியிருப்பு றோ.க.பாடசாலை.

**பெண்கள் பிரிவு**

முதலாமிடம் -கொகுகிளாய் அ.த.க.பாடசாலை, இரண்டாமிடம் -ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் -கற்சிலைமடு அ.த.க.பாடசாலை. (த-322-353)(39)

## உடற்பயிற்சிப் போட்டி

தென்மராட்சி,ஏப்.6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கொடிகாமம் அ.த.க பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(த-117) (32)

## வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.6

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி வி.க. அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. அணி மோதவுள்ளது.

(த-190)(25)

## 'எவரெடி' கிண்ண உதைபந்தாட்டம் யாழ்.லீக் அணி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், ஏப்.6

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் 'எவரெடி' வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த சனிக்கிழமை திக்கம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.லீக்அணி வெற்றிபெற்றது.

யாழ்.லீக்அணியை எதிர்த்து பருத்தித்துறை லீக்அணி மோதியது.

இதில் யாழ்.லீக்அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-190)(26)

## கோப்பாய்ப் பிரிவில் மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களிற்கு இடையிலான மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி காலை 7 மணியளவில் கோப்பாய் பிரதேச செயலக முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றவிரும்பும் வீர, வீராங்கனைகள் அன்று காலை போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு வந்து தங்களது பதிவினை மேற்கொண்டு போட்டியில் கலந்து கொள்ளலாம் என விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (த-190)(25)

## கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.6

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களிற்கு இடையிலான மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மெய்வன்மைப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் கே.டபிள்யூ விமலராஜன் கலந்துகொள்ளவுள்ளார்.

(த-190)(26)

## பிரதேசமட்ட உதைபந்தாட்டம்; பூநகரி நண்பர்கள் அணிவெற்றி

பந்தன், ஏப்.6

பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட வளர்ந்து வரும் கழகங்களுக்கிடையே பூநகரிப் பிரதேச விளையாட்டுத் துறையினரால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் பூநகரி நண்பர்கள் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்திற்கு முழங்காவில் அன்பு ஐக்கிய அணியும் பூநகரி நண்பர்கள் அணியும் தெரிவாகியிருந்தன.

இறுதியாட்டம் கடந்த 24ஆம் திகதி பூநகரி தம்பிராய் அண்ணா வி.க.மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முழங்காவில் அன்பு ஐக்கிய அணியை எதிர்த்து விளையாடிய பூநகரி நண்பர்கள் அணி வெற்றிபெற்றது.

பூநகரிப் பிரதேச விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ச.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசில்களை கடற்புலி அங்கயற்கண்ணியின் தாய், விளையாட்டுத்துறையின் முதன்மை ஆலோசகர் எதிர் வீரசிங்கம் ஆகியோர் வழங்கினர்.

(த-352-203)(26)

## பெண்கள் வலைப்பந்தாட்டம்: பாடுமீன் அணிவெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் பாடுமீன் விளையாட்டுக்கழகஅணி வெற்றிபெற்றது.

பாடுமீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.


இதில் பாடுமின் விளையாட்டுக்கழகம் 20:2 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்றது. (த-190)(26)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியின் போது எடுக்கப்பட்ட படம் இது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு-கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் கணக்காளர் எஸ்.இராஜேந்திரன் உரையாற்றுவதையும் மேடையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா, வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.ஐயாத்துரை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (த-76)

## சாயி சிந்தனை



### வாழ்வுக்கு இன்றியமையாதது

எண்ணங்களும் சொற்களும் செயல்களும் எப்போதும் ஒன்றுக்கொன்று ஒத்தே இருத்தல்வேண்டும். 'திரிகரணசுத்தி' மூவகைத் தூய்மை என்பது எண்ணம், சொல், செயல் இவை மூன்றும் ஒருமிக்க தூய்மையாய் இருத்தல் என்றே பொருள்படும். சாதாரணமாக மக்கள் தாம் நினைப்பது ஒன்றும் சொல்வது வேறொன்றும் செய்வது மற்றொன்றுமாகவே செயற்பட்டு வருகின்றனர். இது மிகப்பெரிய தவறுமட்டுமன்றி மனிதத் தன்மைக்கே முரணானதும் பாசாங்குபுரியும் கபடத்தனமுமாகும். நீங்கள் எண்ணும் எண்ணங்களையும் பேசும் சொற்களையும் புரியும் செயல்களையும் மிக்க கவனத்துடன் உணர்ந்து ஆராயவேண்டும். பொய் பேசுவதனால் கிடைக்கக்கூடிய அற்ப ஆதாயங்கள் உண்மையில் இலாபங்கள் அல்ல. மாறாக, அது உங்கள் மனத்தையே மாசுபடுத்தி பழுதடையச் செய்துவிடுகிறது. இதனால் உங்கள் வாழ்க்கையே நாசமாகிவிடும்.

(ஆதாரம்: சனாதன சாரதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவின் 'ஜே.வி.பி. முகமூடி' அகன்றது!

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஜே.வி.பிக்கு ஏற்பட்ட படுதோல்வியால் ஜனாதிபதி ராஜபக்ஷவின் இனவாதக் கேடயம் பறிமுதலாகிவிட்டது என்றே கூறவேண்டும். ராஜபக்ஷ, ஜே.வி.பி. என்ற முகமூடியை அணிந்துகொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தவிர்க்கவே முனைந்துவந்தார். இப்போது அந்த முகமூடி அகன்றுவிட்டது.

யதார்த்தத்தை மீறி ஜே.வி.பி. இனப்பிரச்சினைகளைக் குழப்பியடிக்கின்றது. இன ஒடுக்குமுறையை யதார்த்தபூர்வமாகப் புரிய ஜனாதிபதி ராஜபக்ஷவே போதும் என்பதுதான் தேர்தல் மூலம் சிங்கள மக்கள் அளித்துள்ள தீர்ப்பாகும். ஏனெனில், இன ஒடுக்குமுறைவாதம் அனைத்து நிறுவன ரீதியிலும் பேர்தியளவு ஸ்தாபிதம் அடைந்துவிட்டது. இப்போது அந்த இனவாதம் ஜே.வி.பியின் முரட்டுத் தனத்துக்குள்ளால் அன்றி ராஜபக்ஷவின் புத்திப்பூர்வத்துக்குள்ளால் செயற்படவேண்டும் என்று விரும்புகின்றனர். உண்மையாகச் சொல்வதாயின் இது இனவாதத்தின் ஒரு முதிர்ச்சி நிலையேயாகும்.

இரு தடவைகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, இரு தடவைகளும் 3/4 பா:கிற்கு மேற்பட்ட பலத்தைத் தனிக்கட்சியாக நாடாளுமன்றத்தில் கொண்டிருந்த ஜெயவர்த்தனா இனப்பிரச்சினையைச் சிறிதும் தீர்க்க விரும்பவில்லை. பதவியில் இருந்து இறங்கிய பின்பு அளித்த பேட்டியொன்றில் 'சமஷ்டி முறைதான் ஒரேயொரு தீர்வு' எனக் கூறியிருந்தார்.

முழு அளவில் கேள்விக்கிடமற்ற பலம் ஜே.ஆரிடம் இருந்தபோதிலும் அவர் தீர்வு



காணவிரும்பவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இப்படித்தான் ஒவ்வொரு சிங்களத் தலைவர்களினதும் மனிநிலையுண்டு. ராஜபக்ஷவும் அவ்வாறுதான் செயற்படும் போக்குடையவராவார். எனவே, ராஜபக்ஷவிற்கு இப்போது ஜே.வி.பியினரின் பிடி தளர்ந்துவிட்டாலும், எதிர்க்கட்சி ஆதரவளிக்கப் போவதாகக் கூறிவந்தாலும் ராஜபக்ஷ பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தயாரில்லை என்ற உண்மையை நாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

தீர்வு காண்பதைப் பற்றி யாரும் கதைக்கலாம். ஆனால், தீர்வு காண்பதற்கான நடைமுறைசார்ந்த செயற்பாட்டில் ஈடுபடுவதாயில்லை. சமஷ்டித் தீர்வு பற்றி ஜே.ஆரும் கதைத்தார்தான். ஆனால், நடைமுறையில் எந்தவொரு சிங்களத் தலைவரும் இதற்குத் தயாரில்லை என்ற பேருண்மையை நாம் பெரிதும் கருத்திலெடுக்கவேண்டும்.


தமிழ்பேசும் மக்களை எப்படி ஒடுக்கலாம் என்றுதான் சிந்திக்கிறார்களே தவிர பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணலாம் என்று சிந்திக்கவில்லை. 'புலிப் பயங்கரவாதம்' என்று கூறிக்கொண்டு பிரச்சினையைத் தலைகீழாக அணுகுகின்றார்களே தவிர பிரச்சினைக்கூடாக அவர்கள் சிந்திக்கவில்லை.

பழைய தலைவர்கள் அப்படி நடந்தார்கள். எனவே, புதிய தலைவர்களும் அப்படித்தான் நடப்பார்கள் என்றவகையில் மட்டும் நாம் பிரச்சினையை அணுகவேண்டியதில்லை. பழைய தலைவர்களினது நடவடிக்கைப் போக்கையும் சிந்தனைப் போக்கையும் அப்படியே புதிய தலைவர்களும் கொண்டிருப்பதால் பழைய தலைவர்களைப் போலவே புதிய தலைவர்களும் தீர்வு காணமாட்டார்கள் என்றமுடிவை நாம் எட்ட முடியும்.

அதாவது பழைய தலைவர்களினது காலங்களைத் தாண்டியும் அவர்கள் காலத்து நடவடிக்கைகளின் விளைவான கசப்பானதும், பாரதூரமானதுமான அனுபவங்களைப் புதிய தலைவர்கள் கண்கூடாகக் கொண்டிருந்தும் பழைய போக்கிற்கு எதிரான புதிய போக்குகளை எத்தலைவரும் கொண்டிருக்கவில்லை. எந்தவொரு சிங்களத் தலைவர்தானும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அப்பால் அவர்கள் தம் உரிமையின் பொருட்டுப் புரிந்துள்ள தியாகங்களைச் சொல்வதில்லை. தமது இராணுவ ஒடுக்குமுறையின் கொடூரங்களை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

தமது உரிமைக்காகத் தான் தமிழ் மக்கள் போராடுகின்றார்கள் என்பதை சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களுக்குச் சொல்வதில்லை. மாறாகத் தமிழ் மக்களின் பிரச்சினையை "பயங்கரவாதம்" என்றே வர்ணிக்கிறார்கள். "பயங்கரவாதத்தை" சமாளிப்பதற்கான ஒரு விட்டுக்கொடுப்பாகத் தீர்வுகள் பற்றி சிங்கள மக்களிடம் கூறுகிறார்களே தவிர அது தீர்வு காணப்படவேண்டிய தமிழ் மக்களின் உரிமை என்று கூறுவதில்லை. "பயங்கரவாதத்தை" கையாள்வதற்கான ஒரு வழியாகத் தீர்வைப் பற்றிப் பேசுகிறார்களே தவிர தாம் தமிழ் பேசும் மக்களை ஒடுக்கிவருவதுதான் பிரச்சினை என்று சிங்கள மக்களுக்கு அவர்கள் கூறுவதில்லை.

ஆதலால் மேற்படி கருத்து நிலையில் நின்றுகொண்டு மேற்படி கருத்து நிலைக்கான



அணுகுமுறையைப் பின்பற்றிக் கொண்டு தீர்வு காணலாம் என்று யாரும் கற்பனை செய்ய முடியாது. தமிழ் மக்களை ஒடுக்கும் தமது இராணுவத்தைப் புகழ்ந்தேற்றிக்கொண்டு தீர்வைப்பற்றி யாருமே சிந்திக்கமுடியாது. தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தை முற்றிலும் ஒடுக்குமுறையாளர்களாகவே காண்கின்றனர். அத்தகைய இராணுவத்தையும் இராணுவ நடவடிக்கைகளையும் புகழ்ந்தேற்றும் ஒருவரால் ஒருபோதும் தீர்வுகாணமுடியாது என்பது மிகவும் சாமானியமான உண்மையாகும்.

ஜே.வி.பியின் தடையகன்றதான மேற்படி வீழ்ச்சியின் பின்பு ராஜபக்ஷ தீர்வு காண்பார் என்று எவன் சொல்வான்? தமிழ் மக்கள் மீது பாரிய ஒடுக்குமுறை புரிந்துவரும் இராணுவத்தை ராஜபக்ஷ போஷிக்கிறார். அத்தகைய இராணுவத்தை உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியாக அவர் பலப்படுத்தி வருகிறார்.

1983 கறுப்பு ஜூலை இனப்படுகொலையானது மிலேச்சத்தனமான செயல் என்பதை உலகின் எந்தவொரு பால்குடியும் சொல்லும். அத்தகைய ஒரு இனப்படுகொலைக்கு இப்போது கண்துடைப்பாக நஷ்டஈடு வழங்கும் ஜனாதிபதி ஏன் தமது இராணுவத்தின் படுகொலைகள் பற்றி எத்தகைய ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை. கடந்த மூன்று தசாப்தகால படுகொலைகள் பற்றி அவர் புகழ்மாலை சூட்டுகின்றாரே தவிர அத்தகைய இராணுவ நடவடிக்கை பிழை என்று அவர் கூறுவதில்லை.

அதாவது தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்திக்கொண்டு எவராலும் தீர்வுகாணமுடியாது. ஜே.வி.பியினரின் தோல்வியின் பின்பு ஜனாதிபதி ராஜபக்ஷ என்னசெய்து வருகின்றார் என்பதைப் பார்ப்போமானால் அவர் தீர்வு காணமாட்டார் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

"பயங்கரவாத" எதிர்ப்பு என்பதன் பேரில் அவர் பாகிஸ்தானிய அரசுடன் ஓர் இராணுவ உடன்பாட்டிற்கு வந்துள்ளார். இது அவரது சிந்தனையினதும் செயற்பாட்டினதும் தொடர்ச்சியை அப்படியே பேணுகின்றது. தமிழ் மக்களை ஒடுக்குவதற்குப் பாகிஸ்தானிய இராணுவ உதவியைத்தான் அவர் கோருகின்றார். இதன் மூலம் அவர் தனது இராணுவத்திற்கு தென்பையும் உற்சாகத்தையும் அளித்துள்ளார். இதன் மூலம் சிங்கள இராணுவம் ஒடுக்குமுறைக்கான மனோதிடத்தையும் புத்துயிர்ப்பையும் பெறும். இத்தகைய நிலையில் ராஜபக்ஷ தீர்வு காண்பார் என யாரும் கனவுகாண முடியாது.

ஜே.வி.பியின் தோல்வி ராஜபக்ஷவிற்குத் தீர்வு காண்பதற்கான கதவைத் திறந்துள்ளது என்று கூறுவதை விடவும் ராஜபக்ஷவின் நிலையில் நின்று பார்க்கும்போது அத்தோல்வி ராஜபக்ஷவிற்கு ஓர் இன்னலை ஏற்படுத்திவிட்டது என்றே கூறவேண்டும். ஏனெனில், ஜே.வி.பியைச் சாட்டாக வைத்துக்கொண்டு அவர் தீர்வுகாண தடைக்காரணியை முன்புபோல் இப்போது கூறமுடியாது. இந்த வகையில் இனவாதத்திற்கான ராஜபக்ஷவின் ஒரு கேடயம் சரிந்துவிட்டது. அவரால் முன்புபோல் ஜே.வி.பியை ஒரு தடைக்காரணியாக ஒரு வீரியத்துடன் எடுத்துக் கூற முடியாதாயினும் ஏதாவது சாக்குப்போக்கு



கூற வழியிருக்கின்றது.

அதாவது இதற்கு முன்னைய உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களில் 219 ஆசனங்களைப் பெற்றிருந்த ஜே.வி.பி. தற்போது 300 ஆசனங்களைப் பெற்றுள்ளதென்றும் அதனால் ஒரு சபையைத் தவிர பல சபைகளைப் பெறமுடியாது போனாலும் மக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற சக்தியெனவும் அவர் காரணம் கூறத் தவறப்போதில்லை.

'கிராமங்களால் சுற்றி வளைத்து கிராமத்தை வீழ்த்து' என்பது மாசேதுங்கின் கோட்பாடு. அதன் அடிப்படையில் கிராமங்களின் ஆட்சி தம் கைக்கு மாறப்போவதாகவும் தாமே அடுத்து இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை பெறப்போவதாகவும் தற்காலங்களில் கூறிவந்த ஜே.வி.பிக்கு அதன் நிலையில் நின்று பார்க்கையில் இது ஒரு படுதோல்வியாகும்.

ஜே.வி.பி. ஒரு விளிம்பிலான தோல்வி அடைவதையே ராஜபக்ஷ விரும்பியிருந்தார். இப்படிப் படுதோல்வி அடைவதை அவர் விரும்பியிருக்கவில்லை. படுதோல்வியானது இனப்பிரச்சினையைக் கையாள்வதில் தனது பலத்தைக் குறைத்து விடுமென ராஜபக்ஷ நம்பினார்.

இதில் சிங்கள மக்களின் தீர்வு மறுவளமாக இருந்தது. அதாவது ஜே.வி.பி.யினரின் முரட்டுத்தனமான இனவாதம் நிலைமைகளைக் குழப்பி யுத்தத்தைத் தோற்றுவித்துவிடும். அது நிலைமைகளைக் கைகடந்த நிலைக்குத் தள்ளிவிடும் என உணர்ந்தார்

போற் தெரிகின்றது. அதாவது ஜே.வி.பி. மொத்த 12,000 கூட்டங்களை இத்தேர்தல் காலங்களில் நடத்தியுள்ளது. உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு ஒரு மிகப்பெரிய தொகைக் கூட்டங்களாகும். மற்றைய அனைத்துக் கட்சிகள் நடத்திய கூட்டங்களின் கூட்டுத் தொகையை விடவும் இது அதிகமானது. அப்படியிருந்தும் மக்கள் ஜே.வி.பி.யின் கைகளில் உள்ளூராட்சி சபைகளை ஒப்படைக்கத் தயாராகவில்லை.

மக்கள் நம்புகிறார்கள் இன ஒடுக்குமுறையைப் புரிய ராஜபக்ஷவின் இனவாதம் போதும் என்பதுதான். ராஜபக்ஷ வின் இனவாதத்தின் மீது சிங்கள மக்களுக்குப் போதிய நம்பிக்கை உண்டு. ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னை சிங்கள இனவாதத்தின் 'மீள்ப்பர்' ஆகவே காட்டினார். பதவிக்கு வந்த பின்பும் நடைமுறை சார்ந்த வகையில் அவர் இனவாதப் பாதையிலிருந்து வழுகவில்லை. மேலும் அவர் சர்வதேச நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தனது இனவாதத்தை நெறிப்படுத்தி வருகிறார் என்பது சிங்கள மக்களுக்குத் தெரியும். ஆதலால் இனவாதத்திற்கு ராஜபக்ஷ போதும் என்பதே சிங்கள மக்களின் தீர்ப்பாகும்.

'இடது சாரிகளை' தோற்கடித்து வருவது ஐ.தே.க.அல்ல; அது சு.கதான் என்பது மீண்டும் ஒரு தடவை இத்தேர்தல் மூலம் நிரூபிக்கப்பட்டுவிட்டது. இக்கருத்தைக் கடந்த ஆண்டு வெளிவந்த 'சமஷ்டியா தனிநாடா' என்ற எனது நூலில் சுட்டிக்காட்டியுள்ளேன். மேலும் இடதுசாரிகள் தொலைந்துபோன இடம் சு.கவின் இரைப்பைதான் என்பதை இவ்வாண்டு வெளியான கொழும்பு 2007 என்ற எனது நூலில் எழுதியுள்ளேன். திரு. வே.பாலகுமாரனின் எழுத்துக்களிலும் இக் கண்ணோட்டம் உண்டு..

## மு.திருநாவுக்கரசு

சு.கவின் நடுவழி என்பது எப்போதும் முதலாவது அர்த்தத்தில் இடதுசாரிகளை ஏப்பமிடும் ஒரு வழியாகும். பண்டார நாயக்காவால் தொடங்கப்பட்ட நடுவழி அதாவது இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் இடையேயான நடுவழி இடதுசாரிகளைத் தெளிவாக ஏப்பமிட்ட வழியாகும். நடுவழி என்பது வீழ்ந்து செல்லும் சித்தாந்தத்தை தூக்கி நிறுத்தவல்ல ஒரு புதுவழியாகும். அந்தப் புதுவழிக்குள் ராஜபக்ஷவினது புதிய மெருகுக்கள் ஜே.வி.பி. தன்வீரியத்தை இழந்துவிட்டது. அரசியல் எண் சட்டத்தில் ஜே.வி.பிக்கு கூட்டவும் தெரியாது; கழிக்கவும் தெரியாது என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளது.

பண்டாரநாயக்க தனது பதவி வேட்கை



யின் பொருட்டு இனவாதம், நடுவழி என்ற இரண்டையும் சரிவர ஒன்றாக இணைத்திருந்தார். புதிய உலகளாவிய உள்நாட்டுச் சூழலில் ராஜபக்ஷ இதனை மிகவும் மெருகுடன் கையாண்டுள்ளார். அதாவது பண்டாவின் இனவாதத்தை ஜே.வி.பியின் கரங்களில் கூர்தீட்டிக்கொடுத்துவிட்டு அதே வேளை, ஜே.வி.பிக்கு எதிரான நடுவழியைத் தன் கையில் வைத்துக்கொண்டு போர்க்களம் புகுந்தார். ஜே.வி.பி தீவிர இனவாதத்தின் பெயரால் ராஜபக்ஷவின் சாக்குப் பைகளுக்கு வாக்குகளைக் குவித்தது. ராஜபக்ஷ ஓர் இனவாதியேயாயினும் உலகுக்கு முகம்கொடுக்கவல்ல ஒரு மிதவாதியாகவும் காட்சி அளித்தார். சர்வதேச சமூகத்திடமும் சமாதான விரும்பிகளிடமும் இனவாதம் தன்னுடையதல்ல: அது ஜே.வி.பியினுடையதுதான் எனத் தூக்கிக் காட்டினார். அவமானத்துக்குரிய பக்கத்தை ஜே.வி.பியிடமும் நன்மதிப்புக்குரிய பக்கத்தைத் தன்னிடமும் இடமாற்ற வல்லத் திட்டத்தை ராஜபக்ஷ ஜே.வி.பியின் மூலம் அரங்கேற்றியுள்ளார். அரசியலை அதன் அறுவடைக்குள்ளாலும் விளைவுகளுக்குள்ளாலுமே பார்க்கவேண்டும். ராஜபக்ஷவின் காட்டில் நல்ல அறுவடை. ஜே.வி.பியின் வீட்டில் 'காலும் கையும் தான் மிச்சம்'

'காடு விளைஞ்சென்ன மச்சான் நமக்குக் கையும் காலும் தானே மிச்சம்' என்ற பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் வரிகள் ராஜபக்ஷ - ஜே.வி.பி உறவு பொறுத்து நன்றாகப்பொருந்தும். (24-32-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மர உலோக உற்பத்தியாளர் சங்கத்தின் அறிவித்தல்

மேற்படி சங்கமானது யாழ்.மாவட்டத்தில் மர உலோக வேலைகளில் ஈடுபடுபவர்களை பதிவுசெய்து அவர்களுக்கு ஒப்பந்த வேலையை வழங்கி வருகின்றது. எனவே யாழ்.மாவட்டத்தில் மர உலோக உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் அனைவரும் எமது சங்கத்தில் பதிவுகளை மேற்கொண்டு ஒப்பந்த வேலைகளை எமது அனுமதியுடன் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். மேற்படி நடை முறையினை மீறி ஒப்பந்த வேலைகளை பெற்று செய்வோர் மீது நிர்வாக ஒழுங்குக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

(48035)
(32.26.45.11)

வடக்கு - கிழக்குப் பிராந்திய நிர்மாணிகள் சங்கம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## சொகுசுடைய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம். (48465) (24.11.45.26)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090, 0777 246117

## பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன் வரலாறடங்கிய (சுய விவரம்) வேண்டுகைகளை 12.04.2006 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

### பணிநிலை

01. ஆய அலுவலர் (ஆண்கள்)
02. ஆய உதவியாளர் (ஆண்கள்)
03. சமையலாளர் (ஆண்கள்)
04. சமையல் உதவியாளர் (ஆண்கள்)
05. கடின உழைப்புச் சிற்றூழியர் (ஆண்கள்)

### தகைமை

பணிநிலை: 01. க. பொ. த. (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
02. க. பொ. த. (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
03. உள்நாட்டு உணவு வகைகள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
04. சமையல் உதவியாளர் பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
05. ஆண்டு-07 கற்றிருப்பதுடன் சிற்றூழியர் பணியில் மூன்றாண்டு (03) பட்டறிவு இருத்தல் வேண்டும்.

### வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி

மேலாளர்,
ஆளணிப் பிரிவு,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

### நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்

12.04.2006 புதன்கிழமை
காலை 10 மணி

### நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்

நடுவப்பணியகம்
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

குறிப்பு: * தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
* நேர்முகத் தேர்வுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படமாட்டாது. பணிநிலை வேண்டுகைகளை அனுப்பிவைக்காதோரும் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கலாம்.

(சி-48705)
(54-45-11)

மேலாளர், ஆளணிப்பிரிவு,
ஆயப்பகுதி.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில
BY: விக்னேஸ்வரன் ஆச்சாரி. 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.
'THE ROYAL IS THE BEST' (49022)(26.11.45)

15 வருட சேவையில்
கொக்குவிலில் இயங்கும்
தனியார் கல்வி நிறுவனத்திற்கு

### ஆசிரியர் தேவை

தரம் 4-11 கணிதம்
தரம் 4-6 ஆங்கிலம்
தரம் 10-11 வணிகம்

தொடர்பு: 0779590521 (49015)(26.11.45)

## வருடாந்த திருவிழா

மல்லாவியில் அமைந்துள்ள அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(த-322)(39)

## ஆசிரியர் செயலமர்வு தினங்கள் மாற்றம்

தென்மராட்சி,ஏப்.6

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான பயிற்சிச் செயலமர்வு இடம்பெறும் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

புதிய அறிவிப்பின் பிரகாரம் எதிர்வரும் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் ஆங்கில பாடம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெறும். எதிர்வரும் 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் சமூகக் கல்வி, சமயம் ஆகிய பாடங்களும் -

எதிர்வரும் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் அழகியல், தொழில் நுட்பப் பாடங்களும்-

எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களும் - சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

(ஒ-117)(32)

## பாராட்டி வாழ்த்துகின்றோம் வரவேற்கின்றோம்



யாழ்.மாவட்ட கமநல சேவைகள் நிலையங்களில் செயற்பட்ட இலங்கை வங்கிக் கிளைகளில் பணியாற்றிய காலங்களில் விவசாயிகள் வாழ்வு பிரகாசமடைய அப்பணிப்போடு அளப்பரிய சேவை புரிந்து இன்று பதவியுயர்வு பெற்று

இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளராக பதவிப் பொறுப்பேற்றிருக்கும்

### உயர்திரு. பி.ஏ.அருமைநாயகம் (B.A.)

அவர்களின்
சேவை நாயகனான தங்கள் சேவை...
மேன்மேலும் இமயமாய் உயர்ந்து
செழிப்பானதாக அமைய இறைவனை இறைஞ்சி
ஆளுமை நாயகனாக வடபுலத்தில் கால் பதித்திருக்கும்
கண்ணியமான நாயகனே!
பழகுதற்கு இனியவரே பண்பானவரே!
தங்கள் காலத்தினில்...
விவசாய வளர்ச்சி தரமுயர்ந்து தரணியிலே
புதுமெருகோடு புதுநடை போட வேண்டுமென
வாழ்த்தி தங்களை வரவேற்கின்றோம்.

(சி/48708)
(21.26.11.45)

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்.மாவட்டம்.
யாழ்.மாவட்ட விவசாய சம்மேளனங்களும்
யாழ்.மாவட்ட கமநல சேவைகள் நிலையக் குழுவினரும்.

## இலவச மனை முகாமைத்துவ பயிற்சி நெறி

பூவேலை, ஐசிங், தலையலங்காரம், உணவு வகை தயாரித்தல்

10-04-2006 முற்பகல் 10 மணிக்கு மேற்படி பயிற்சி நெறி யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் ஆரம்பிக்கப் படவுள்ளது. பயில விரும்பும் மாணவர்கள் 09-04-2006 இற்கு முன் அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்,
யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி. (49030)(26.11.45)

## மரண அறிவித்தல்கள்



### கிளமன்ற் சேக்ஸ்பியர்

(ராஜன் - பிரான்ஸ்)

குருநகரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட கிளமன்ற் சேக்ஸ்பியர் (ராஜன்) கடந்த 27.03.2006 திங்கட் கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் கிளமன்ற் - ஆரோக்கியம் (மலர்) தம்பதியரின் அன்பு மகனும் ஆரோக்கியநாதன் (எழுதுநர், புனித பத்திரிசியார் கல்லூரி) - அஞ்சலீனா தம்பதியரின் அன்பு மருமகனும், எமறன்சியா சுமதினியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் ஹென்றி, ரொனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று(05.04.2006) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெற்றுள்ளமையால் அவரின் ஆன்ம இளைப் பாற்றிற்காக நாளை (07 . 04 . 2006) வெள்ளிக்கிழமை காலை 6.15 மணியளவில் யாழ்.மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும் திருப்பலியிலும் இல்ல வழிபாட்டிலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, புனித மாதா கோயில் கிழக்குவீதி,
யாழ்ப்பாணம். (49008) (39.11.45.26)

தகவல் :
மாமா, மாமி.

### இராமுப்பிள்ளை யோகநாதன்



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இராமுப்பிள்ளை யோகநாதன் அவர்கள் 04.04.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கைப் புகுந்தவிட முகவரியாகக் கொண்ட அன்னார் அமரர்களான இராமுப்பிள்ளை - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவனும் அகிலன் (டோகா), அகிலா, தர்ஷினி, பிரதீபன் (2005A/L கணிதப் பிரிவு, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சண்முகநாதன், வேல்நாதன், லோகநாதன் (தேவன்), இராஜேஸ்வரி (தேவி), செல்வநாதன் (நகுலன், லக்சுமி ஸ்ரேடர்ஸ், கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- சரஸ்வதி தம்பதியரின் அருமை மருமகனும் செல்வராஜ் அவர்களின் மாமனாரும் காலஞ்சென்ற லீலாவதி, பூமணி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் (சோடா), இரத்தின சிங்கம் (சிலாபம்), காலஞ்சென்ற இராசலிங்கம் (சின்ராசா), காலஞ் சென்ற இராசரெத்தினம், சவுந்தலாதேவி, புவனதேவி, காலஞ் சென்ற யோகாம்பிகை, தனலட்சுமி, புவனசுந்தரம், சந்திரவதனா ஆகியோரின் மைத்துனரும் கனகசபாபதி, பாலசுப்பிரமணியம் (சுப்பு மாமா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.: 077 9231694
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (49031)

தகவல்:
செல்வநாதன் (நகுலன்-சகோதரன்)
T.P.: 021 222 2928,
பு.மயூரன் (மருமகன்).
T.P.: 0777 593743 (32.11.45.26)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வராசா சரஸ்வதி

108/9, கச்சேரி-நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சரஸ்வதி அவர்கள் 02-04-2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராசாவின் (J.P.) அன்பு மனைவியும் செல்வகுமார் (ஜேர்மனி), கிருஷ்ணகுமார் (லண்டன்), துஷ்யந்தி, சசிகலா, குணாழினி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கந்தையா, நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் அருளானந்தம்(மாநகரசபை, யாழ்ப்பாணம்), மகேந்திரன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சியாமளா(ஜேர்மனி), பிரபாகரன் (சௌமியா ரெக்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மருமகளும் மதிசூதன், செந்தமிழ்மாறன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திரு.திருமதி திருநாவுக்கரசு (சித்தன்கேணி), திருமதி ஐயாத்துரை (இணுவில் கிழக்கு) அவர்களின் அன்பு மைத்துனியும் திருமதி தம்பையா இராசம்மா (மூத்தவிநாயகர் வீதி) அவர்களின் பெறாமகளும் திருமதி ரகு ராணி அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06-04-2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

108/9, கச்சேரி-நல்லூர் வீதி,
நல்லூர். (49033)(26.11.45)

தகவல்:
க.செல்வராசா J.P. (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிநிலை வெற்றிடம்

சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை, கிளிநொச்சி.

*** தாதியர்கள்**

* வயதெல்லை20-30(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
* க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட ஒரே அமர்வில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

* மருத்துவம் சார்ந்த துறைகளில் குறைந்தது இரண்டு வருட அனுபவம் விரும்பத்தக்கது.

காலம்-08.04.2006(சனி) காலை 9.30-12வரை.

குறிப்பு:-1) விண்ணப்பங்கள் நேர்முகத் தேர்வு அன்றே பெறப்படும்.
2) அனைத்து தகமைச் சான்றிதழ்களுடனும் சமுகம் தரவும்.

நிர்வாகம்,
கிளிநொச்சி.

(சி-48711)
(54-17-49)

## யாழ்-கொழும்பு விமான பயணிகளுக்கான நேர மாற்றம் பற்றிய அறிவித்தல்

யாழ்-கொழும்பு விமான சேவை நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்க வேண்டிய நேரம் காலை 8.30 மணியாகவும் விமானம் புறப்படும் நேரம் மு.ப.11.45 ஆகவும் இருந்தது. 04.04.2006 தொடக்கம் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்க வேண்டிய நேரம் காலை 6மணியாகவும் விமானம் புறப்படும் நேரம் காலை 9 மணியாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு-
MANOJ AIR TOURS (PVT)LTD

NO.32,CLOCK TOWER ROAD,JAFFNA.
021 222 3916

NO.6,HOSPITAL ROAD, JAFFNA.
021 222 2007

HOTLINE-0777 517019
0777 801038

(சி-48712)
(54-17-49)

## மரண அறிவித்தல்கள்

### தம்பு செல்வராஜா



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் தற்போது திருகோணமலையைப் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்வராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்கள் நேற்று (05.04.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் கிரேஸ்அழகம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் டெய்சி, டொறத்தி (வைத்தியர்-கொழும்பு), டல்சி (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), டோறா (நோர்வே), டெல்வின் (ஜேர்மனி), டொமற்றிலா (கிருபா) (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிறிஸ்ரிகிருபாகரின் (கண்டி) பெரியப்பாவும் பிரேம்குமார் (பொறியியலாளர், புகையிரத திணைக்களம்- கொழும்பு), அரசரட்ணம் (இலங்கை வங்கி 2ஆம் தரக் கிளை யாழ்.), ரவிக்குமார் (நோர்வே), செல்வராஜ் (ஜேர்மனி), காஞ்சனா (கண்டி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஞ்சலோரூபன், ஏஞ்சல்ரூபினி, நோவாஅமலன், மனோவாநிமலன், சலோமி, ஆன்மீதினி, ஆறோன்மகிபன், ஆமோஸ் நிருபன், ஏஞ்சலிமகிழினி, ஹரிகிசன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

59, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.
தொ.பே.: 0262227491

(49047)
(54-17-49)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சின்னராசா சின்னப்பிள்ளை



புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை, செட்டிபுலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா சின்னப்பிள்ளை அவர்கள் நேற்று (05.04.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னராசாவின் அன்பு மனைவியும் கரலஞ்சென்றவர்களான இளையதம்பி- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சிவராஜா (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்- லண்டன்), ஜெகதீசன், இரத்தினநாயகம் (சொக்கன்), புனிதவதி (இந்தியா), யோகராசா, புஸ்பவதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சவுராத்தை, சின்னம்மா, குழந்தை செல்லமுத்து,வேலுப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சூரியகுமாரி (லண்டன்), செல்வானந்தம் (இந்தியா), கருணைநாதன் (சுவிஸ்), மரியறூபி (கனடா), நிர்மலா, செல்வமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் அருட்செல்வன் (பிரான்ஸ்), அகிலா (பிரான்ஸ்), சிவச்செல்வன் (பிரான்ஸ்), குலச்செல்வன் (சுவிஸ்), தனா (இந்தியா), பிரியா (இந்தியா), தவச்செல்வன் (இந்தியா), சுஜிபரன் (லண்டன்), சுஜிதா (லண்டன்), சுகன்யா (சுவிஸ்), நிழூகா (சுவிஸ்), லக்ஷன், தக்சாயினி, அலெக்ஷன், லவனியா, நிக்கொலின், கம்சியா, கேனுஷன், மதனிகா, டதுர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 131, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் இருந்து கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிபுலம்,
வேலணை.

(49046)
(54-17-49)

தகவல்:
சி.ஜெகநீசன் - (மகன்)
நாவாந்துறை.

## வேலணைப் பிரதேச செயலக ஏற்பாட்டில் சனியன்று இலக்கியப் பெருவிழா

வேலணை ஏப்.6

வேலணைப் பிரதேச கலாசார பேரவையால் நடத்தப்படும் கலைஇலக்கியப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் மு. நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், பேராசிரியர் என்.சண்முகலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

தீவக. வலயக் கல்வி பணிப்பாளர் ஆர். ராஜேந்திரன், வேலணைப் பிரதேச செயலர் எஸ்.கே. மகேந்திரலிங்கம் ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகள், சிறப்பு மலர் வெளியீடு என்பவற்றுடன் பின்வருவோர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். பட்டம் பெறுவோரும் அவர்களுக்கு வழங்கப் படவுள்ள பட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு:

பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் வி.சிவசாமி ஆகியோருக்கு கலை ஞானப்புரவலர் பட்டமும், கலாநிதி செ.திருநாவுக்கரசு, சு. வில்வரத்தினம், திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன், சிவகுரு பரராசசிங்கம், மருதன்கந்தையா, சி.இரத்தின சபாபதி, ஆகியோருக்கு 'கலைவாருதி' பட்டமும் வழங்கப்படவுள்ளது.

(எ-167)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி இராஜரத்தினம்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் ராஜவாசம் புலோலி மேற்கு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராஜரத்தினம் அவர்கள் நேற்று (05.04.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2006) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி.

(49034)
(54-17-49)

தகவல்:
இ.இராஜராஜேஸ்வரி
எஞ்சினியர் அண்ணா
(Sonytone)

## பல்கலைக்கழக விளையாட்டு அணித்தலைவர்களுக்கான அவசர கலந்துரையாடல்

விளையாட்டு அணிகள் சம்பந்தமான முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருப்பதால் அணித்தலைவர், உப தலைவர்களை இன்று (06.04.2006) வியாழக்கிழமை உடற்கல்வி அலகுடன் தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் விருதுகள் நாள் சஞ்சிகைக்கான புகைப்படங்கள் 10.04.2006 திங்கட்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

த.கான்டீபன்,
செயலாளர், விளையாட்டு அவை.

(49025)
(54-17-49)

## தேவை

பேக்கறித் தொழிலில் அனுபவமுள்ள பாஸ்மாரும் உதவியாளர்களும் உடன்நேரில் வரவும்.

பாஸ் சம்பளம்-1200ரூபா. 1ரேண்
உதவியாளர் சம்பளம்-1000ரூபா. 1ரேண்

றொலெக்ஸ் பேக்மாட்
கஸ்தூரியார்வீதி,யாழ்ப்பாணம்

(49025) (54-17-49)


ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
**மெர்க்குரிப் பூக்கள்**
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.30, 6.30, 9.00, (பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த் நடித்த
**சுதேசி**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

பரத், சந்தியா
நடித்த
**காதல்**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கணபதி அன்னமுத்து



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதி அன்னமுத்து நேற்று (05.04.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கணபதி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் கணபதியின் பாசமிகு மனைவியும் புவனேஸ்வரி (கனடா), கமலாதேவி (கனடா), கனகேஸ்வரி, பத்மாவதி (கனடா), சண்முகலிங்கம் (நோர்வே), சற்குணசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயும் செல்வராஜா (கனடா), காலஞ்சென்ற தர்மலிங்கம், இரத்தினம், குகநாதன் (கனடா), மகேஸ்வரி (நோர்வே), சிலுவேத்திரி ஆகியோரின் பாசமிகு மாமியும் சுரேகா - விமல்குமார் (கனடா), வேனிலா - மல்கம் (கனடா), ருக்சாந்த் (கனடா), ரமணன் (கனடா), பிரசன்னா (இ.மி.ச), ரமணப்பிரியா (பேராதனைப் பல்கலைக் கழகம்), ராகுலன், பிரசாந்தி, றொபேக்கா (கனடா), கார்த்திபன் (கனடா), கலைரூபன் (கனடா), கோபிகா (கனடா), சாருஜன் (நோர்வே), சாருஜி (நோர்வே), ஜெயசுதா - சிவனேசன், சுதாகரன், சியாமளா - தயாளன், சர்மிளா, பிரதீபா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் கனடாவில் வசிக்கும் ஜோயல், ஜேக்கப், ஜினியா மற்றும் துஷாந்தன், துஷர்தன், துஷாயினி, தனுசா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2006) வியாழக்கிழமை நண்பகல் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ராஜ வீதி, இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(49045)
(54-17-49)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிவஸ்கந்தராஜா பஞ்சரத்தினம்



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சரத்தினம் சிவஸ்கந்தராஜா அவர்கள் நேற்று (05.04.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஸ்கந்தராஜாவின் அன்பு மனைவியும் கஜன், றஞ்சன், மாலா (கனடா), ராகுலன், விமலா ஆகியோரின் பாசமிகு தாயும் குமுதா, கணேசமூர்த்தி (கனடா), சசிதரன் ஆகியோரின் மாமியும் அபிராஜ், அருசன், ராஜேகாந், ரித்திஜா (கனடா), ஸ்ரீபாலகிருஸ்ணன், லவகுஜன் ஆகியோரின் பேர்த்தியும் சிவஞானம் காலஞ்சென்ற வைத்திலிங்கம், காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக சங்கரத்தை வழுக்கையாறு இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr.செல்லத்துரை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(49038)
(54-17-49)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P.: 0776967900

### திருமதி நடராசா மகேஸ்வரி



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு கேணியடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா மகேஸ்வரி அவர்கள் கடந்த (03.04.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின்அன்பு மனைவியும் பொன்னுத்துரை - சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் இரத்தின் (சிவபாலன்), இராஜவெம்சன்(குட்டி), கணேசலிங்கம், காலஞ்சென்ற கலாதேவி, ஜெயபாலன், சுதாகரன், சாந்தினி, ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் பொன்னம்பலம், தங்கா, தெய்வேந்திரம், கனகமணி, ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திரா, விஜயா, இரஞ்சினி, நந்தபாலன், வசந்தகுமாரி, சித்திரா, சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பரமேஸ்வரி, அன்னபூரணம், இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2006) வியாழக்கிழமை பி.ப.4.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(49044)
(54-17-49)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

### முத்துக்குமாரு தேவராசா

தொட்டிலடி, சங்கானையைச் சேர்ந்த முத்துக்குமாரு தேவராசா அவர்கள் 04.04.2006செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தவபூசணியின் அன்புக் கணவரும் நடராசா (தபால் அதிபர், பண்டத்தரிப்பு), ஞானேஸ்வரி (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கேதினி (கௌரி), தவரூபன் (சின்னரூபன்), தர்சிகா, பவரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.04.2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4 மணிக்கு விழாவெளி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

(49043)
(54-17-49)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சிவலிங்கராசாவின் அகவை 60 நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.6



யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். சிவலிங்கராசாவின் அறுபதாவது அகவையை ஒட்டிய நூல் வெளியீட்டுவைபவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகவை அறுபதுக்கு ஓர் அன்புக் கையுறை என்னும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த நூல் வெளியீட்டு விழாவில் 'யாழ்ப்பாணம்: மொழியும் வாழ்வும்' என்னும் நூல் வெளியிடப்பட உள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் நூல் வெளியீட்டு விழாவில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர், கலாநிதி வண. நீ.மரியசேவியர் அடிகள், பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரைகளை பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், கலாநிதி க.குணராஜா, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் ஆகியோர் வழங்குவர்.

நூல் அறிமுக உரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்குவார். முதற்பிரதியை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக்கொள்வார்.

பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் நூலை மதிப்பீடு செய்வார். (ஐ)(18)

# உலக ஆன்மீகக் குரு ரவிசங்கர் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்

## யாழ்.இந்துக் கல்லூரியில் மகா சத்சங்கமம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்ப்பாணத்தில் நாளை வெள்ளிக்கிழமை.முதற்றடவையாக நடைபெறவுள்ள மகா சத்சங்கமத்திற்கு வருகைதரவுள்ள உலகப் புகழ்பெற்ற ஆன்மீகக் குரு தவத்திரு ஸ்ரீஸ்ரீரவிசங்கர் அவர்கள் குடாநாட்டில் முக்கிய பிரமுகர்களைச் சந்திக்கவுள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை காலை யாழ் வருகைதரும் அவர் அன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் பிரமுகர்களைச் சந்தித்து கலந்துரையாடுவார்.

இதில் யாழ். மாவட்டத்திலுள்ள மதத் தலைவர்கள் நீதிபதிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் வர்த்தக சங்க பிரதிநிதிகள் அரசதிணைக்கள அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து மாலை ஆயிரம் மாணவர்களின் ஆன்மீக இசையுடன் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து ஆன்மீகக் குரு தவத்திரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திற்கு தமிழ் கலாசார பண்பாடுகளை பிரதிபலிக்கும் வகையிலான பண்பாட்டுப்பவனியுடன் ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.

பின்னர் மகா சத்சங்கமம் மாலை 5.30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆன்மீக நிகழ்வில் குடும்பமாக பங்கு கொண்டு குருஜியின் தரிசனம் மற்றும் ஆசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சர்வதேச வாழும்கலை அற நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

(எ-7)(18)

# திருமலையில் நேற்று அமைதிப்பேரணி

திருகோணமலை, ஏப்.6

நாட்டில் நிரந்தர சமாதானமும் அமைதியும் நிலவ வேண்டும் எனக்கோரி திருகோணமலை நகரில்நேற்று அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய சமூகங்களைச்சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

மாவட்டத்தில் உள்ள பெண்கள், சிறுவர் பராமரிப்பு நிறுவனம் அமைதிப் பேரணிக்கான அழைப்பினை விடுத்திருந்தது.

பேரணியாகச் சென்ற பெண்கள் சமாதானம் நிலவ ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றை திருமலை மாவட்ட அரச அதிபரிடம் சமர்ப்பித்தனர்.

மகஜரின் பிரதி மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் எமோ ஜோன்சனிடமும் கையளிக்கப்பட்டது. (எ-14)

# பத்தாயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களை ஒப்படைத்துவிட்டு கொரியா நோக்கிப் பயணமாகத் தயாராகுங்கள்''

- இவ்வாறு கிண்டலாகக் கூறினார் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா.

நேற்று நாடாளுமன்றில் ஒத்திவைப்புப் பிரேரணை விவாதத்தின் போது உரையாற்றிக் கொண்டிருந்தார் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா.

அப்போது குறுக்கீடு செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், பல இளைஞர்களுக்குக் கொரியாவில் தொழில்வாய்ப்புப் பெற்றுத் தருவதாக அரசு கூறியிருந்ததே அதற்கு என்ன நடந்தது எனக் கேட்டார்.

அதற்குப் பதிலளிக்குமுகமாகவே இவ்வாறு கிண்டலாக மேர்வின் சில்வா கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இதை நீங்கள் என்னிடம் கேட்க வேண்டிய அவசியமில்லை. தொழில் அமைச்சர் இருக்கிறார் அவரிடம் கேளுங்கள்.

அப்படி இல்லாவிடில் உங்களுக்கு ஏதும் பிரச்சனை இருந்தால் சொல்லுங்கள். நான் தீர்த்துவைக்கின்றேன். உங்களில் எவரையாவது கொரியாவுக்கு அனுப்பவேண்டுமா?.

உங்களுடைய புலிகள் உறுப்பினர்களுக்கு தொழில் தேவைப்படுகிறதா? அல்லது உங்கள் தலைவர் பிரபாகரனுக்குத் தொழில் தேவைப்படுகிறதா?

அப்படியென்றால் சுமார் 10 ஆயிரம் புலிகளை என்னிடம் அனுப்பிவையுங்கள். உங்கள் தலைவர் வே. பிரபாகரனையும் அனுப்பிவையுங்கள். அவர்களை நான் கொரியாவுக்கு அனுப்பி தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கின்றேன்.

ஆனால், கொரியாவில் யுத்தம் ஏற்பட்டால் அதற்கு நான் பொறுப்பல்ல.

- இவ்வாறு அவர் கிண்டலாகக் கூறினார். (எ-க)

# விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் நேற்று இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.இச்சம்பவம் நேற்று இரவு 10 மணியள வில் இடம்பெற்றுள்ளது.

சிவகுரு மணிமாறன் (வயது-23) என்பவரே விபத்தில் படுகாயமடைந்தவரராவார்.

வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஹன்டர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இந்த விபத்து இடம் பெற்றதாக ஒருதகவல் தெரிவித்தது. எனினும் இந்தச் செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை. படுகாயமடைந்தவர் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டார்.

(எ-14)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மே. 22 இல் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஏப்.6

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை அடுத்த மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் மாதம் 15ஆம் திகதி நிறைவடையும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளதாக இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது. (எ-14)

# இணைத்தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் ஜூலியன் வில்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரச தரப்பில் ஜனாதிபதியுடன் அவரது செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ, திறைசேரிச் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரட்ண, சமாதானப் பேச்சுக் குழுவின் உறுப்பினரான பாலித்த கொஹோன்ன ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அமைதிப் பேச்சுகளுக்கான அடுத்த கட்ட ஏற்பாடுகள் குறித்தும், அதற்காக அரசு தயாராகிவருவது குறித்தும், நேற்றைய சந்திப்பின் போது ஜனாதிபதி விளக்கிக் கூறியுள்ளார் எனக் கூறப்பட்டது. அமைதிப் பேச்சுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு தேவையென்றும் ஜனாதிபதி இந்த சந்திப்பின்போது வலியுறுத்திக் கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(எ-க)

# சூரபத்மன் வதைப்படலம் புராணப்படிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.6

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்தபுராண படனத் தொடர்ச்சியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சூரபத்மன் வதைப்படலம் இடம்பெறும்.

மாலை 5 மணியளவில் விசேட பூசை நடைபெறும் என்றும் - புராண வித்தகர்களை இதில் கலந்துகொள்ளுமாறும் ஆலயத்தின் செயலாளர் கலாநிதி வ.கந்தசாமி கேட்டுள்ளார்.

(எ)

# புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு சுயேச்சைக் குழு வொன்று தாக்கல்செய்த வேட்புமனு நிராகரிக் கப்பட்டதையடுத்து அங்கு வேட்புமனுவைத் தாக்கல் செய்த ஈ.பி.டி.பி. போட்டியின்றித் தெரிவானதாக அறிவிக்கப்பட்டது. மேற்படி வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்தே நேற்றைய மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. (எ-க)


கணக்கீடு
திரு. பாலவாசன்
B.B.A. (FM Spl.)
A/L 2007
நிறைவில் பதிவு
Sat., Sun. 10 -11
ஆரம்பம்: 08.04.2006
10 a.m. (ப.நே.)
D.C.M
பருத்தித்துறை வீதி.

NIRU
KONDAVIL
A/L 2008
CHEMISTRY
ஆரம்பம்: 08.04.2006
சனி 3.30 p.m.
BY: N.MAHESWARAN


# இணக்கப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், கூடுதல்புட்ச அதிகாரப் பகிர்வுடைய - இந்திய முறைமைக்கு சமமான - ஒரு தீர்வே இலங்கை இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வாக அமையவேண்டுமென்று சுட்டிக்காட்டி யதுடன் இதற்காக தென்னிலங்கை அரசியற்கட்சிகளிடையே இணக்கப்பாடு ஏற்படவேண்டு மென்றும் தெரிவித்தார்.

இலங்கையின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் - மூவின மக்களும் அச்சமின்றி வாழக்கூடிய - அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய - அரசியல் தீர்வொன்றிற்கு இந்தியா முழு ஒத்துழைப்பு வழங்குமென்றும் இந்தியப் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

(எ-க)


யாழ்.-கொழும்புக்கான சொகுசு பஸ் சேவை
தொலைபேசி மூலமாகவும் உங்கள் ஆசனப்பதிவுகளை மேற்கொள்ளலாம்.
T.P. 222 8139
தொடர்புகளுக்கு:
சன் நெற்
பருத்தித்துறை வீதி,
இருபாலை சந்தி,
இருபாலை.





விடுமுறைக்கால வகுப்பு
சமூகக் கல்வியும் ...
By: கருணாநிதி
Mon.-Fri. 1.30- 3.00
ஆரம்பம்: 10.04.2006
* இருவாரங்களில் இந்த அலகு பூர்த்தியாக்கப்படும்.
* 2006 A/L மாணவர்களுக்கு சிறப்பானது
NEW SCIENCE COLLEGE

பிரத்தியேக வகுப்பு கணக்கீடு
A/L 2007 Part II
Sat. San.
கம்பனிக் கணக்கீடு : 3-4
பங்குடமைக் கணக்கீடு : 2-3
By: Kajan
ஆரம்பம்: 09.04.06 Sun.
Beacon - யாழ்.
வெலிங்டன் சந்தி அருகில்


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை

மாவடி ஆலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று(05.04.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.04.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்துக்கு பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி ஆலய வீதி,
சங்கானை.
(சி-48718) (18-12-49)

தகவல்:
ந.சிவசுப்பிரமணியம்(மகன்).
லீலா பேக்கரி, சங்கானை.

## திருமதி நாகலிங்கம் நாகம்மா

அத்தியடியைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் நாகம்மா அவர்கள் நேற்று(05.04.2006)புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் சந்தானலக்ஷ்மி, அம்பிகைபாலன், சிவபாலமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் மகாலஷ்மி, செல்வராணி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.04.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில். நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/2, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776365729 (49048) (18-12-49)

தகவல்:
ந.சிவபாலமூர்த்தி (மகன்).


மாபெரும் யாழ். வர்த்தக கண்காட்சி -2006
பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுங்கள்!
காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை
இடம்: யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு :-
DREAM SOLUTIONS (PVT) LTD
275, JAFFNA ROAD, MANIPAY






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பௌதீகவியல் - II

திரு. R.குமரன். B.Sc. யாழ்.

கடந்த 30.03.2006ஆம் திகதி அன்று வெளியாகிய பௌதீக வியல் அமைப்புக் கட்டுரை வினாப்பகுதியின் இரண்டின் தொடர்ச்சி இன்று வெளி யாகின்றது.

வெளியீடு 01

f) கிற்றார் (guitar) இழை ஒன்று பிடுங்கப்பட உருவாகும் அதிர்வெண் வீச்சு கீழுள்ள ஒலி மீடிறன் நிறமாலையில் உண்டு.




நிலைக்குத்துக் கோடுகளின் நீளங்கள் அதிர்வெண்களின் சார்பு உயர் வீச்சங்களைக் காட்டுகின்றன.

i. அடிப்படை மீடிறனின் அசைவு காலம் யாது?

ii. இழையானது அடிப்படை அதிர்வை நிகழ்த்தும் போது இழையின் நடுப்புள்ளியின் இடப்பெயர்ச்சி நேரத்துடன் மாறும் வரைபை வரைக? (அச்சுக்கு பொருத்தமான அளவிடையை கொடுக்க)

g) இழையானது அதன் முன்றாம் இசைச்சுரத்தில் (2ம் மேற்றொனி) அதிரும் போது இழையின் அதிர்வு நிலையை வரைக? வீச்சத்தை தெளிவாகக் காட்ட பொருத்தமான அளவிடையை பயன்படுத்துக.

h) இழையின் நீளம் ஆனது வெளிவரும், குறித்த சுரத்தின் மீடிறனைப் பாதிக்கிறது. வெளிவரும் சுரத்தின் மீடிறனைத் தீர்மானிக்கும் வேறு இரு காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றின் விளைவை விளக்குக.


காரணி 1: ____________________

விளைவு ____________________

காரணி 2: ____________________

விளைவு ____________________

03)a)




உருவில் காணப்படும் கோடு AB ஆனது தலைமை அச்சாகும். வில்லை ஒன்று புள்ளிப் பொருள் O வின் விம்பத்தை I இல் தோற்றுவிக்கிறது.

(i) தரப்பட்ட வில்லை எவ்வகையானது?

(ii) வில்லை வைக்க வேண்டிய இடத்தை படத்தில் தெளிவாக குறிக்க?

(iii) வில்லையின் குவியப்புள்ளி (F) ஐக் குறித்துக் காட்டுக?

b) பொருள்தூரம் (u) விம்பத்தூரம் (V) என்பவற்றை அளந்து ஓர் ஒடுங்கு வில்லை ஒன்றின் குவியத் தூரத்தைகான மாணவன் ஒருவன் முற்பட்டான்.


(i) இதற்கு தேவையான இரு மேலதிக பொருள்கள் யாவை?

(ii) மேற்கூறிய செய்முறைக்கு முன்பாக வில்லையின் அண்ணளவான குவியத் தூரத்தை அறிந்திருத்தல் நன்று. இதனை எவ்வாறு மேற்கொள்ளலாம்? கதிர்ப்படம் வரைக?

(iii) வழமையான பரிசோதனை நிலைக்குரிய கதிர்ப்படம் வரைக?

(iv) பரிசோதனை அமைப்பில் U,V தொடர்புபடும் கோவையை எழுதுக?

c) இப்பரிசோதனையின் போது மாணவன் அமைத்துக்கொண்ட வரைபு அருகில் தரப்பட்டுள்ளது.




(i) வரைபிலிருந்து வில்லையின் குவியதூரம் யாது?

(ii) வில்லையின் குவியவலு யாது?


(iii) இப்பரிசோதனையின் போது அவதானித்த விம்பம் வளைந்து காணப்பட்டதாக மாணவன் கூறினான் இதனை விளக்குக?

d)

(i) ஒரு மனிதனின் அண்மைப்புள்ளியின் தூரம் 50cm, அவன் 25cm ல் உள்ள எழுத்துக்களை படிப்பதற்கு அணிய வேண்டிய வில்லையின் வலு யாது?

(ii) பகுதி (d) (1) இல் உள்ள மனிதன் நீரினுள் இருந்து நோக்கும்போது அண்மைப்புள்ளியின் தூரம் 50cm இலும் அதிகரிக்குமா? அல்லது குறைவடையுமா? அல்லது மாற்றமுறாதா?

04) கலம் ஒன்றின் மின்னியக்க விசை E ஐத் துணிய இரு முறைகளைப் பயன்படுத்த முடியும். கலம் ஒன்றின் அகத்தடை r ஐயும் எம்மால் கணிக்க முடியும். படத்தில் காட்டியபடி கலத்தின் முனைகள் A,B வோல்ற்மானிக்கு இணைக்கப் பட்டது.





i. மேற்காட்டியபடி AB இக்கு குறுக்கான அழுத்தவேறுபாடு அளக்கப்படின் இவ் வாசிப்பு மின்னியக்கவிசையன்று என்பதற்கு காரணம் தருக?

ii. கலம் ஒன்றின் மின்னியக்க விசை என்பதால் கருதுவது யாது?

iii. கலம் ஒன்றின் மின்னியக்க விசையின் பெறுமதியை துணிவதற்கு உயர்தடை வோல்ற்மானியின் அவசியம் யாது?

5) கீழே காட்டப்பட்ட மின்சுற்றில் தடைக்கம்பியின் நீளம் = L அலகு நீளத் தடை =W ஆழி S மூடப்பட்ட மின் ஓட்டம் I ஆனது அம்பியர்மானியின் மூலம் வாசிக்க முடியும்.




i. W,L,E,r சார்பாக I இக்கான கோவையை தருக?

ii. நேர்கோட்டுத் தொடர்பைப் பெற மேலே பெற்ற கோவையை ஒழுங்குபடுத்துக?

iii. மேலே பெற்ற கோவையில்

சாரா மாறிக் கணியம் :- ____________________

சார் மாறிக் கணியம் :- ____________________

iv. மேல் வினாவிலிருந்து கலத்தின் மின்னியக்க விசையை எவ்வாறு துணிவீர்?

v. கலத்தின் அகத்தடையை எவ்வாறு துணிவீர்?

vi. மேலுள்ள பரிசோதனையின் போது நீர் மேற்கொள்ளும் செய்முறை யாது?

(முற்றும்)

## விடைக் குறிப்புகள்

## உயிரியல் I

Mr.R. Easvarathasan B.Sc. (Cey), Dip.In Edu., M.Ed.

வெளியீடு 02

1. I. 1. இருவித்திலைத் தாவரத்தில் மட்டும் நிகழும்.
2. மாறிழைய கலப் படையின்
3. உயிர்ப்பான இழையுருப் பிரிவினால்.
4. புதிய கலங்கள் உருவாக்கப்படும்.
5. கலன் மாறிழைய வளையத்தால்.
6. துணைக்காழ்
7. துணை உரியம்
8. தக்கை மாறிழையத்தால்
9. தக்கை
10. துணை மேற்பட்டை உருவாக்கும் செயல்முறை

II. 11. கலன் கட்டில் காணப்படுகின்ற சிறுகட்டு மாறிழையம்
12. உயிர்ப்படைந்து இழையுருப்பிரிவினால் பெருகும்.
13. உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் கலங்களைத் தோற்றுவிக்கும்.
14. கலன்கட்டுக்கிடையே காணப்படும் புடைக்கல விழையக்கலங்கள்
15. பிரியும் இயல்பைப் பெற்று கட்டிடைமாறிழையமாகும்.
16. சிறுகட்டுமாறிழையம், கட்டிடை மாறிழையம் சேர்ந்து
17. கலன் மாறிழைய வளையமாகும்.
18. இதிலுள்ள கலங்கள் இழையுருப்பிரிவினால்
19. உட்பக்கமாக துணைக்காழ் இழையமும்.
20. வெளிப்பக்கமாக துணை உரிய இழையமும் உருவாக்கும்.
21. சில மையவிழையக் கதிரின் புடைக்கல விழையத்தை உருவாக்கும்.
22. இதனால் தண்டின் சுற்று தொடர்ச்சியாக அதிகரிக்கும்.
23. இதனால் மேற்றோல் சிதைவடையும்.
24. தண்டின் மேற்பட்டைப் பகுதியில் இருந்து
25. தக்கை மாறிழையம் / தக்கையாக்கி தோன்றும்.
26. வெளிப்புற தக்கைக் கலங்கள்
27. சுபரின் ஏற்றப்பட்டவை. 28. உள் புறம் துணை மேற்பட்டை
29. சுபரின ஏற்றப்படுவதில்லை 30. பட்டைவாய்ப் பகுதியில்
31. கோளவுருவான கலங்கள் 32. நிரப்பு கலங்களாகும்.
33. இறந்த கலங்களாகும். 34. சுபரின் ஏற்றப்படாது
35. தண்டின் ஆரம்ப கோட்டுப்படம்
36.
37. துணைவளர்ச்சி - இழையப் பரவல் கோட்டுப்படம்
38.

(38 × 4 = 152 Marks)(Total = 150 Marks)

2. 1) நரைநிற உடல் - B என்க
2) கருமைநிற உடல் - b என்க
3) சாதாரண உணர்கொம்பு - A என்க
4) முள்ளுடைய உணர்கொம்பு - a என்க
5) $P_1$ - நரைநிற உடல் சாதாரண உணர்கொம்பு - BBAA
6) $P_2$ கருமை நிற உடல் முள்ளுடைய உணர்கொம்பு - bbaa
7) [P] BBAA × bbaa
8) G BA ba
9) F1 BbAa—
10) 100%
11) நரைநிற உடல் சாதாரண உணர்கொம்பு
12) [P] BbAa × bbaa
13) [G] BA Ba bA ba ba

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) $[F_2]$ BbAa Bbaa bbAa baa
15) ந. நி. சா. உ ந. நி. மு. உ க. நி. சா. உ க. நி. மு. உ
16) 25% 25% 25% 25% (16× 5 = 80Marks)
17) பெறுபேறுகள் மெண்டலின் விதிக்கமையவில்லை
18) நரைநிற உடல் Gene சாதாரண கொம்பு Gene உடன் இணைந்துள்ளது.
19) கறுப்பு நிற உடல் முள்ளுடன் Gene உடன் இணைந்துள்ளது.
20) நரைநிற உடல் Gene முள்ளுடைய உணர்கொம்பு Gene குறுக்குப் பரிமாற்றமடைந்துள்ளது.
21) கறுப்புநிற உடல் Gene சாதாரணகொம்பு முள்ளுடைய Gene குறுக்குப் பரிமாற்ற மடைந்துள்ளது.
22) இதனால் மீளச்சேர் இயல்பு குறைவாக தோன்றியுள்ளது.
23) இணைப்பு இயல்பு அதிகளவு தோன்றியுள்ளது. (7× 8 = 56 Marks)

3. I. 1. ஓரின உயிரங்கி 2. இன்னொரு இன உயிரங்கியில்
3. வெளிப்புறம் அல்லது உட்புறம் வாழ்ந்து
4. உடற்தொழில் இணைப்பு / சேதன இணைப்பு
5. உணவு, வாழிடம் ஆதாரம் பெற்று 6.தீமையை ஏற்படுத்தும் அங்கி

II. * வாழிடத்தில் சிறப்பாக வாழ
7) உருவம் மிகச் சிறிதாக இருத்தல்
8) அவசியமற்ற வெளித்தூக்கம் மாற்றிடுத்தல்

* வாழிடத்தில் ஆதாரத்தை பெற
9) வெளிப்புறத் தோல் தடிப்பானது
10) உறுஞ்சிகள் காணப்படல்
11) கொழுவிகள் இருத்தல்

* தேவையற்ற உடற்பகுதி ஒடுக்கம்
12) புலனங்கம் விருத்தி குறைவு 13) இடப்பெயர்ச்சி அங்கம் ஒடுக்கம்
14) நரம்புத்தொகுதி விருத்தி குறைவு 15) தசைத்தொகுதி விருத்தி குறைவு
* உடற்தொழில் இசைவாக்கம்
16) ஒட்சிசன் இல்லாத நிலையில் காற்றின்றிய சுவாசம்
17) சீதம் உருவாக்குவதன் மூலம் உடல் பாதுகாப்பு
* இனப் பெருக்க இசைவாக்கம்
18) அதிகளவு முட்டைகளை இடுதல்
19) அதிகளவுதொற்று பருவங்களை உருவாக்குதல்
20) ஓரில்லமுடையதாக இருத்தல்.

III. 21. *Plasmodium vivax*
22. *Wuchereria bancrofti*

IV மலேரியா ஒட்டுண்ணி - காவியில்
23. காவி Anopheles பெண் நுளம்பு மனித குருதியை எடுக்கும் போது குருதியூடாக.
24. வாழ்க்கைவட்ட புணரிக்குழியங்கள் (நுண் புணரிக்குழியம், மரபுணரிக்குழியம் கண்டப்பை / இரைப்பையை அடையும்.
25. மரபுணரிக்குழியத்தில் இருந்து ஒரு மரபுணரி தோன்றும்.
26. நுண்புணரிக்குழியத்தில் இருந்து 4 - 8 வரை நுண்புணரி தோன்றும்.
27. கண்டப்பை / இரைப்பையினுள் - புணரிகள் கருக்கட்டும்.
28. நுகம் - இயங்கும் நுகம் / இயங்கும் முட்டை எனப்படும்.
29. இயங்கி கண்டபபை சுவரைத் துளைத்து மேலணி - சூழவுள்ள தொடுப்பிழைய உறைக்கு இடையில் சென்றடையும்.
30. இயங்கும் நுகம் - முட்டைச் சிறைப்பை ஆகும்.
31. ஒடுக்கற்பிரிவு நிகழ்ந்து அதிக எண்ணிக்கை
32. வித்தியுயிர்கள் உருவாக்கும்.
33. வித்திச் சிற்றுயிர்களை உருவாக்கும்.
34. குருதிக் குழியினூடாக உமிழ்நீர் சுரப்பியை அடைந்து வாயுறுப்பினூடாக மனிதனை அடையும்.
35. Diagram / வரிப்படம் யானைக் கால் ஒட்டுண்ணி
36. காவி Culex பெண் நுளம்பு மனித குருதியை எடுக்கும் போது குருதியினூடாக
37. Micro filarea கண்டப்பையை சென்றடையும்.
38. தளர்வான உறையில் இருந்து விடுபட்டு கண்டப்பை சுவரைத் துளைத்து குருதியினூடாக நெஞ்சறைத் தசையை அடையும்.
39. தோலகற்றலால் $L_2$ அடையும்.
40. தோலகற்றால் $L_3$ குடம்பி
41. மூன்றாம் குடம்பி ($L_3$) நெஞ்சறைத் தசையில் இருந்து விடுபட்டு குருதிக்குழியை அடையும்.
42. உமிழ்நீர் சுரப்பியை அடைந்து வாயுறுப்பினூடாக மனிதனை அடையும்.
43. Diagram / வரிப்படம் காவியைக் கட்டுப்படுத்தல்
44. பௌதீக கட்டுப்பாட்டுமுறை 45. இரசாயனக் கட்டுப்பாட்டுமுறை
46. உயிரியல் கட்டுப்பாட்டுமுறை
47. பௌதீக கட்டுப்பாட்டுமுறையில் - நீர்நிலைகளை அகற்றுவதன் மூலம் விருத்திப் பருவங்களை அகற்றலாம்.
48. நீர் கொள்ளும் பாத்திரம், குழிகளை இல்லாமல் செய்தல்.
49. இரசாயன முறையில் - Malathion, Beygon பயன்படுத்தல்.
50. உயிரியல் கட்டுப்பாட்டுமுறையில் - குடம்பிகளை உண்ணக்கூடிய மீன்களை நீரில் வளர்த்தல்.

(50 × 3 = 150 Marks)

V) 1) பித்தம் சுரத்தல்
2) பித்தத்தில்- நீர், கனிப்பொருள், சீதம், பித்தநிறப்பொருள் -பித்த உப்புக்கள், பித்த அமிலம்,கொலஸ்ரோல் (Any Five)
3) Heparin சுரத்தல்
4) கபோவைதரேற்று அனுசேபத்தில் ஈடுபடல்.
5) மேலதிக Glucose, Glycogen ஆக மாற்றிய சேமிப்பு.
6) Glucose மட்டம் குறைய, Glycogen ஐ Glucose ஆக மாற்றுதல்.
7) கொழுப்பு அனுசேபத்தில் ஈடுபடல்.
8) மேலதிக கொழுப்பமிலம், கிளிசரோல் என்பவற்றை
9) சேமிப்பு இலிப்பிட்டுக்களாக மாற்றிய சேமிப்பு
10) புரத அனுசேபத்தில் ஈடுபடல்.
11) மேலதிக அமினோவமிலம்
12) அமைனகற்றலுக்குட்படுத்தி
13) விரியாவை தோற்றுவித்தல்.
14) பிறப்புரிமைப் பொருள்கள் (Genetic meterial) உடைத்தல்.
15) விரிக்கமிலம் உருவாக்குதல்.
16) நச்சகற்றல்
17) மேலதிக மருந்துப்பொருள்கள், நச்சுப்பொருள்கள், அல்ககோல் (any two)
18) ஓமோன்களைத் தொழிலற்றதாக்கல்
19) Insulin, sex Hormone, Thyroxine, Glucacone (any two)
20) Vitamine A தொகுப்பு
21) Carotene / பச்சை இலையில் இருந்து
22) குருதிப் புரதங்கள் தொகுக்கப்படும்.
23) Albumin, Globulin, Fibrenogen, clotting factor (any two)
24) அவசியமற்ற அமினோவமிலம் தொகுக்கப்படும்.
25) கொழுப்பில் கரையும் விற்றமின் A, D, E, K சேமிப்பு
26) நீரில் கரையும் விற்றமின்கள் Riboflavin, Riacin, Pyridoxine, Folic acid, $Vit_{12}$ (Any two)
27) இரும்பு, செம்பு போன்றவை சேமிப்பு
28) தின்குழியச் செயலில் ஈடுபடல்.
29) நுண்ணங்கிகளிடம் இருந்து பாதுகாப்பு
30) உடல் வெப்பநிலை குறையும்போது அனுசேபத்தை காட்டி வெப்பம் உருவாக்குதல்.
31) முதிர் மூலவுரு நிலையில் செங்குழிய உற்பத்தி
32) உடலில் குருதியின் அளவைக் கட்டுப்படத்தல்.

***விடைக் குறிப்புகள்***

# உயிரியல் II

Mr.R. Easvarathasan B.Sc. (Cey), Dip.In Edu., M.Ed.

வெளியீடு 02

## பகுதி - I இன் பகுதி - A

## அமைப்புக்கட்டுரை

A. (i) A - மயிர்தாங்குபடை / மேற்றோல் B - மேற்பட்டை
C - அகத்தோல் D - காழ் (4 × 1½ = 6 Marks)
(ii) Apoplast, Symplast, Vacuslar pathway (3 × 1½ = 4½ Marks)
(iii) 1. Apoplast :
* கலத்தின் கலச்சுவர் ஊடாக
* கலத்திடை வெளியூடாக
* திணிவோட்டம், பரவல் மூலம்
* நீரின் அசைவாகும். (4 × 1½ = 6 Marks)

2. Symplast :
* கலத்தின் குழியவுருவில் இருந்து
* முதலுரு இணைப்பினூடாக
* பிரசாரணம் மூலம்
* அருகாமைக் கலக் குழியவுருவுக்கு
* நீரின் அசைவு ஆகும். (4 × 1½ = 6 Marks)

3. Vacuolar :
* கலத்தின் சாற்றுப் புன்வெற்றிடத்திற்கு
* புன்வெற்றிடமென்சவ்வு
* முதலுரு மென்சவ்வு ஊடாக
* பிரசாரணம் மூலம்
* நீரின் அசைவு ஆகும். (4 × 1½ = 6 Marks)

(iv) * Apoplast * Casparian strip எனும் பட்டிகை காணப்படல். (2 × 1½ = 3 Marks)

B. (i)
* உயர் தன்வெப்பக்கொள்ளளவு
* உயர் ஆவியாக்கல் மறைவெப்பம்
* உயர் உறைதல் மறைவெப்பம்
* குறைந்த பாகுத்தன்மை (4 × 1½ = 6 Marks)

(ii) தாவரங்கள் -
* ஆவியாதல் / ஆவியுயிர்ப்பு
* கசிதல் (2 × 1½ = 3 Marks)


விலங்குகள் -
* வியர்த்தல்
* சிறுநீர் கழித்தல்
* கண்ணீர் வடித்தல் (2 × 1½ = 3 Marks)

(iii) தாவரங்கள் -
* உலர் தோல்
* செதில் இருத்தல்
* புறவன் கூடு
* Keratin ஏற்றப்பட்டதோல் (2 × 1½ = 3 Marks)

C. (i)
* தாவரங்களின் காற்றுக்குரிய பகுதியில் இருந்து
* நிரமுத்தப் படித்திறனாக்கமைவாக
* நீர் நீராவியாக இழக்கப்படல் (2 × 1½ = 3 Marks)

(ii) இலைவாய், பட்டைவாய், புறத்தோல்
(iii)
* இலைவாய் துவாரம் திறத்தலில் காவற்கலம் பங்கேற்கும்
* காவற்கலங்களால் $K^+$ உள்ளெடுக்கப்படும்
* ATP சக்தி பயன்படும்
* காவற்கல கரைய செறிவு அதிகரிக்கும்
* காவற்கலத்தில் நீரழுத்தம் குறையும்.
* விளைவாக காவற்கலத்தினால் நீர் செல்லும்
* வீக்கம் அதிகரிக்க இலைவாய் திறக்கும்: (7x1½ = 10½ Marks)

(iv) ABA (Abscisic Acid) (1 × 1½ = 1½ Marks)
(v)
* இருவடிதாள் 5% $CoCl_2$ கரைசல் நனைந்து உலர்த்துக.
* தாவர இலையின் இருபக்கம், கீழ்பக்கம், மேற்பக்கம் உலர்த்திய வடிதாளை வைத்து வழுக்கியை நிலைப்படுத்துக. சூழ வசலீன் c இறுக்குக.
* இருபக்கமும் வைக்கப்பட்ட தாள் நிலத்திலிருந்து சிவப்பாக மாறும் நேரத்தைக் குறிக்கவும்.
* எப்பக்கத்தில் விரைவாக இளஞ்சிவப்பு தோன்றுகிறதோ அப்பகுதியில். கூடியளவு நீர் இழுக்கப்படுகின்றது. அப்பக்கம் கூடிய ஆவியுயிர்ப்பு நிகழுகின்றது.




(உயிரியல் அமைப்புக்கட்டுரை விடைகளின் தொடர்ச்சி 13.04.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)

கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தொ.பே. இல. 0714273035, 0714220008

**கல்விச்சுடர்**

**உதயன் பணிமனை,**

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org